Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1. } 1911ஆ ஏப்ரல்மீ 15உ. விரோதிகிருதுஆ சித்திரைமீ 3உ. { பகுதி 12.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம் |
| --- | --- |
| பிரஹ்மவித்யை—ப. நா. | ௩௮௧ |
| இந்தியாதேசம்நலம்பெறும்முறை—சிவராமசுப்பிரமணியன் | ௩௮௫ |
| மதங்களுக்குள் சகோதர தர்மம் நிகழவேண்டுமென்பது A B ப. நா. | ௩௯௧ |
| இகபரவாழ்க்கை—மு. ரா. கந்தசாமிக்கவிராயர் | ௩௯௯ |
| பிரணவ உபாசனை—நடேசஸ்வாமிகள் | ௪௦௬ |
| புத்தக வரவு—பத்திராதிபர் | ௪௧௩ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௪௧௩ |



# THE

# Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (Lond.) O.M.D.S.F.V. (Berlin).

M.O.S.M.F (Paris): etc.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. Alan Leo writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, Sami Pillai St., Chulai, Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

# பூர்ணசந்திரோதயம்.

## அறிவிப்பு.

இந்த மாசத்தின் பத்திரிகையோடு இப்பத்திரிகைக்கு ஒரு ஆண்டு நிறைவாகிறது. வருகிற மேயீ 15உயில் இப்பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு ஆரம்பமாகிறது. பத்திரிகையை முதலில் 32 பக்கங்கள் அடங்கியதாக வெளிப்படுத்த உத்தேசித்தோம். இப்போது, இம்மாசத்தின் பத்திரிகையின் கடைப்பக்கத்தைப் பார்த்தாலே, 414 ஆகிறது. ஆகவே, 414 பக்கமுள்ளதாக இப்பத்திரிகையின் முதற்றொகுதி (Volume) ஏற்படும். நாம் ஆரம்பத்தில் உத்தேசித்தபடி 12×32=384 பக்கம் தான் ஏற்பட வேண்டுவது. மேற்கொண்டு 30 பக்கம் அதிகமாகச் சந்தாதார்களுக்கு அளித்திருக்கிறோம். வருகிற இரண்டாம் வருஷத்தில் ஒவ்வொரு மாதமும் 40 பக்கத்திற்குக் குறையாமல் பத்திரிகையை வெளிப்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறோம். அவ்வுத்தேசம் திருப்தியாக நிறைவேறும் வண்ணம், சந்தாதார்கள் முன்பணம் அனுப்புவதுடன், தம்மால் இயன்றவரை, ஒவ்வொருவரும் ஓர் ஓர் புதிய சந்தாதாரைச் சேர்ப்பிக்கும் பக்ஷத்தில், பத்திரிகை இன்னும் அதிகநலம் பெறும்படியாக முயற்சிப்போம். பக்கங்கள் அதிகப்படுத்தப் பெற்றாலும் முன்னுள்ள இரண்டேரூபாய்தான் வருஷச் சந்தாவாகும். அடுத்த பத்திரிகை, முன்னனுப்பிய சந்தாப்பணம் பாக்கியில்லாதவர்களுக்கு வி. பி. பி. மூலம் அனுப்பப்படும். ரூ 2—1—0 கொடுத்து, அதை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமெனப் பிரார்த்தனை. ஏனையருக்கு அவர்கள் செலுத்தியிருக்கிற சந்தாப்பணம் தீரும் வரையில், பத்திரிகைகள் அனுப்பப்படும். பின்பு, வி. பி. பி. யில் அடுத்தப் பத்திரிகை அனுப்பப்படும். பத்திரிகையை இனி அனுப்பவேண்டாமென்கிறவர்கள் அப்படித் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காமற் போனால் பத்திரிகைகள் வி. பி பி. மூலம் அனுப்பப்படும்.

இப்பத்திரிகை இன்னும் அதிகமாகப் பரவும்படி நம் ஜனங்கள் உதவிபுரிவார்கள் என்று பிரார்த்திக்கிறோம்.

ப. நாராயணன்,
பத்திராதிபர், பூர்ணசந்திரோதயம்.

## பூர்ணசந்திரோதய விளம்பரம்.

—0—

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணு நாலு.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 மாசம் ரூ. | 2—3—0 | அரைப்பக்கம் | 1 மாசம் ரூ. | 1—8—0 |
| ,, | 3 ,, | 6—0—0 | ,, | 3 ,, | 3—8—0 |
| ,, | 6 ,, | 11—0—0 | ,, | 6 ,, | 6—0—0 |
| ,, | 1 வருஷ | 18—0—0 | ,, | 1 வருஷ | 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்

ப. நாராயணையர்,

பத்திராதிபர், "பூர்ணசந்திரோதயம்," மதுரை.

---

## புஸ்தக விளம்பரம்.

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் விலை அணு 6

மனிதன் வம்சாவளியின் உண்மை ... ... ,, 4

ஹிந்துமத தூஷணபரிகாரம் ... ... ,, 4

Avayar's Yoga Aphorisms in English ... Price 4 Annas

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.

அல்லது

Manager, Theosophist Office, Adayar, Madras. S.

## வைத்தியபோதினி.

சித்திரங்களுடன் கூடிய வைத்தியத்தைப்பற்றிய ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 1

டாக்டர். சந்திரசேகரர், கும்பகோணம், பத்திராதிபர்.

## லோகோபகாரி.

இது வாரம் ஒருமுறை சென்னையில் பிரசுரமாகிவரும் பத்திரிகை. இதன் பத்திராதிபர் ஸ்ரீமான் வடிவேலுசெட்டியார் அவர்கள். இதில் உலகவிஷயமும் ஞானவிஷயமும், எளிய தமிழில் யாவருக்கும் உபயோகமாகும்படியாக வெளிவருகின்றன. முக்கியமாக அதன்முதல் பக்கத்தில்வரும் ஞானவிஷயம் நனி நன்மைபயக்கக்கூடியது. சன்மார்க்கமுறையை நாடுபவருக்கு அத்யாவசியமாயுள்ளது.

435

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1911௵ ஏப்ரல்௴ 15௳ விரோதிகிருது௵ சித்திரை௴ 3௳ { பகுதி 12.

## பிரஹ்மவித்யை.

பிரஹ்மவித்யை, பிரஹ்மஞானம், பரவித்யை சிரேயஸ்மார்க்கம் இவை ஒருபொருட்பெயர்கள். ஆங்கிலத்தில் இதற்கு Theosophy என்று பெயர் வழங்குகிறது. இது இரண்டு கிரேக் மொழிகளின் தொடர்மொழி. Theos (தியாஸ்) என்றால் பிரஹ்மன் என்றும், sophia (ஸோபையா) என்றால் ஞானம் என்றும் அர்த்தம் ஏற்படும். இது நூதனமானதன்று. மனிதன் உலகத்தில் தோன்றிய காலம் முதல், இந்த ஞானம் எப்போதும் இருந்துளது. உலகத்தின் இப்போது நடைபெறுகின்ற மதங்களை ஆராய்ந்து பார்த்தாலும், முன் நடைபெற்று இப்போது மறைந்துபோயிருக்கின்ற மதங்களை ஆராய்ந்து பார்த்தாலும், மதங்களின் மூலதத்துவங்கள், அதாவது, ஆதாரமான உண்மைகள் ஒரேமாதிரியாக இருக்கின்றன என்பது தெரியவரும். "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்துபார்க்கின், மாறுபடும் கருத்தில்லை" என்னும் ஆன்றோர் வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு மதத்தையும் ஆராய்ந்துபார்க்கின் உடற்பாகமென்றும், உயிர்ப்பாகமென்றும் இரண்டாய்ப் பிரியும். உடற்பாகமானது கர்மகாண்டமாம். உயிர்ப்பாகமானது ஞானகாண்டமாம். உயிர்ப்பாக சம்பந்தமாக மதங்களில் வேற்றுமையின்றாம். உடற்பாக சம்பந்தமாக வேற்றுமை உண்டாம், அவ்வேற்றுமைக்குக் காரணம்

அந்தந்த மதம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில், அந்தந்த தேசம், காலம், அதிகாரிகளின் தகைமை இவைகளுக்கு ஏற்ப,கர்மமுறைகளும், ஆசாரங்களும், உபாஸனை முறைகளும் பலவாறாக உண்டாயின. ஒவ்வொரு மதத்தையும் உலகத்தில் ஸ்தாபித்தவர்கள் பூர்ணம் பெற்ற மகாபுருஷர்களாகையாலும், உலகத்தில் மனிதன் உண்டான காலம் முதல் இடையறாது இருந்துவருகின்ற ஞானசபையான வெள்ளியம்பலத்தின் அங்கத்தினராக இருந்திருக்கின்றமையாலும், ஞான விஷயங்கள் ஒரேமாதிரியாகவிருக்கின்றன. உதாரணமாக இந்து மதத்திலுள்ள கம்பீரமானஉபநிஷத்க்கள்என்ன, பார்ஸிகள்மதமான ஜோராஸ்தர்மதத்தின் கிரந்தங்கள்என்ன, சீனதேசத்தில வழங்கும் டேயோமத கிரந்தங்கள் என்ன, எகிப்து தேசத்தின் கல்லறைகளில் சேமிக்கப்பட்டிருந்த பிணங்களுடன் வைத்திருந்த 'பாபைரஸ்' என்று சொல்லப்படும் சாஸனங்கள் என்ன, இஸ்லாம் மதத்தின் 'ஸூபிஸ்' என்று சொல்லப்படும் வகுப்பினரின் பக்த ஞானிகள் கற்பிக்கும் நூல்முறைகள் என்ன, பௌத்த மதத்தின் திரிபதகம் என்ன, ஜைனமத சம்பந்தப்பட்ட ஜைன சூத்திரங்களென்ன, ஸீக்கியர்மத கிரந்த சாயபு என்ன, கிறீஸ்துமதத்தின் நோஸ்டிக்கா ஸ்பல் என்ன, இவையெல்லாம் ஒரே வாக்காய் ஒரே மாதிரியான உண்மைகளை உபதேசிக்கின்றமையைப் பாருங்கள். அவ்வுபதேசங்களில் சில இதனடியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(1) மனிதன் ஈசுவரத்தன்மை பொருந்தியவன், ஈசுவர அம்சமாகவிருக்கிறான். அதனால் ஈசுவரனையறியும் திறமை அவனுக்குண்டு. எல்லாரும் ஈசுவரனது அம்சமாகையால், எல்லாரும் உண்மையில் சகோதரர்களாவார்கள். ஒவ்வொரு வஸ்துவிலும் இயங்குகின்ற உயிர் கடவுளின் சந்நிதியாகும். அணு முதல் அமரர்கள் ஈறாக எல்லா வஸ்துவிடமும், எல்லாரிடமும் ஈசுவரன் அந்தர்யாமியாக விருக்கிறான். அவனின்றி ஒரு அணுவும் தங்காது, அசையாது. உயர்ந்த தேவரும் அகண்ட ஜோதியாகிய ஈசுவரனின் ஒரு பொறியாம். ஈசுவரன் அந்தர்யாமியாக இருத்தலும், ஜனங்கள் எல்லாம் ஒரு குடும்பிகளானவர்களாயிருத்தலும்தான் முக்கியமான மூலதத்துவம்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,
நன்றே நினைமின்"—திருமூலநாயனார்.

(2) மற்ற உண்மைகள் மேற்சொன்ன மூலதத்துவங்களையே அனுசரித்து நிகழ்வனவாம். கடவுள் ஒன்றே. அவர் முப்பாண்மையர். அவர் அசைந்திடில் ஒவ்வொரு அணுவும் அசைந்திடும். அவர் அசையாவிடில் ஒரு அணுவும் அசைந்திடாது. "இவன் சக்தியோடு சேர ஜெகம் விரிந்திடும். இவன் தனித்திடில் விரிஜெகம் ஒடுங்குமாம்"—வள்ளலார் சாஸ்திரம். அவர் பிரகிருதியுடன் சம்பந்திக்கிறார். அதனால் தேவகணங்கள் உண்டாகின்றன. மனிதவகுப்பு அக்கணங்களில் ஒன்றே.

(3) பிரஞ்ஞை விகாசம்பெறுதல், சரீரம் மேன்மேலும் அபிவிருத்தி அடைதல், ஜன்மம் உண்டு, கர்மம் உண்டு, இவைகளின் தவறாத விதிகளால் மேன்மேலும் மனிதன் ஜன்மம் எடுத்து எடுத்து அபிவிர்த்தியடைகிறான். பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம் ஆகிய இம்மூவுலகங்களிலும் மனிதன் சஞ்சரிக்கிறான். அதனால் அவன் த்ரிலோகி.

(4) மனிதர்களுக்குள்ளேயே தேவதாம்சம் பொருந்திய ஞானக்குருக்கள் இருக்கிறார்கள். இவர்களையே, சிலர் மஹாத்துமாக்கள் என்றும், சிலர் ரிஷிகள் என்றும், சிலர் தீர்க்கதரிசிகளென்றும் கூறுவர்.

(5) இப்பேர்க்கொத்த விஷயங்கள் ஒவ்வொரு மதத்தின் ஆகமங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், காலதோஷத்தினால் நாளடைவில் சிற்சில உண்மைகள் சிலமதங்களில் மறைந்துபோயின. மறைந்துபோன உண்மைகளை அந்தந்த மதங்களுக்குத் திரும்ப வரும்படி செய்வித்தல், இந்த பிரஹ்மஞான சபையாரின் கருத்துக்களில் ஒன்றாம்.

(6) அறநெறி மறைகள், உலக நீதிமுறைகள், எல்லாரும் சகோதரர் என்ற உயர்ந்த பாவத்தை ஆதாரமாகக்கொண்டு அனுசரித்து நிகழ்கின்றன. அதனால் ஒருவருக்குத் தீங்குசெய்தால் அத்தீங்கு எல்லாருக்கும் துன்பத்தை உண்டாக்கும் தன்மையது. ஒருவருக்குத்

தீங்கு செய்தால் அது உலகம் எங்கும் பரவும். அதனால் சுய நலம் பாராட்டாது பிறர் நலம் பாராட்டவேண்டும். தியாகமே அதன் ஒழுக்கமுறை. அறிவின்மிக்கார் முதலாக அறிவின் இழிஞர் ஈருக, இடைநடுவில் பலபடிகளில் உள்ளவர்கள், அறிவின் தாரதம்மியத்தின்படி இருக்கின்ற பல அதிகாரிகளும், காலக்கிரமத்தில் உயர்நலம் அமைந்த நிலைமையைப் பெறவேண்டியவர்களே! அதனால் பூர்ணர்களாகக் கடைமுறையில் மலரவேண்டியவர்களே! ஒருவரையும் தாழ்ந்தோர் என்று இகழற்க; நாம் உயர்ந்தோர் என்று இறுமாப்பு கொள்ளற்க. எல்லா ஜீவராசிகளும் முடிவில் இறைவனை அடையும் தன்மையனவாம்.

ப. நா.

---

## நன்மொழி.

81. பிராணன் எங்குண்டு மனம் அங்குண்டு, மனம் எங்குண்டு ஜீவனம் அங்குண்டு, ஜீவனம் எங்குண்டு பிரஞ்ஞை அங்குண்டு, பிரஞ்ஞை எங்குண்டு காலதேசங்களின் இருப்புண்டு, காலதேசங்களில் இருப்புண்டெனின் வரம்புகளில் கட்டுண்டு. வரம்புக்குள் கட்டுண்டெனின் குறைவு என்று அறிக. யோகம் என்றால் குறைவை நிறைவாக்கல். அதனால் யோகம் பிராணன் ஒடுங்கல், மனம் ஒடுங்கல், தன்னிலைப்பறல், காலதேசம் கடத்தல், வரம்பு தாண்டல், கடைமுறையில் பூரணம்பெறல் என்று பொருள்பெறும். யோகி எனின் பூர்ணம்பெற்றவன்.

82. காயத்ரி உபாஸனையை அந்தர் ஆதித்ய வித்தை என்பர். அதன் உண்மை என்னவெனில்: சூரியனின் கண்ணுள்ள அதாவது வெளிப்பிரபஞ்சத்தில் உள்ள ஆன்மாவும் அவன் அவன் ஹிருதயத்தின் கண்ணுள்ள ஆன்மாவும் ஒன்றேதான், இரண்டல்ல; "நீ அது ஆனாய் என்னும் பேருரையின் பொருளேயாம். மந்திரத்தின் அர்த்தம்: எங்கள் ஹிருதய குகையில் உள்ள புத்திகளை நடத்துகிறதும் எதிரில் உள்ள சூரியனின்கண் உள்ளதுமான ஜோதியை தியானம் செய்கிறேன்.

4 5 7

# இந்தியா தேசம் நலம் பெறும் முறை.

சமீபகாலத்தில், பம்பாய் ராஜதானியின் கவர்னர் கனங்தங்கிய ஸர் ஜார்ஜு கிளார்க்கு என்பார், வித்தியார்த்திகள் கூடிய பெரியசபையில், விஸ்தாரமாக ஆதரவான புத்திமதிகளை வற்புறுத்திச் சொன்னார்கள். அவைகளில் சில முக்கியமானவைகளைச் சுருக்கமாய் அடியில் குறிப்பிடுகிறோம்—"நீங்கள் கல்விகற்பிக்கும் காலமாகிய இததருணத்தில் உங்களுக்குப் பயன்படும்படியாகவும் தைரியம் உண்டாகும்படியாகவும் சில நன்மொழிகளை உரையாட விரும்புகிறேன். இந்தியாவுக்கு நீங்கள் இனிச் செய்யவேண்டிய கடமைகள் பலவாறாகவும் நானாவிதமாகவும் இருக்கின்றன. இத்தேசத்திற்கு அனேக குறைகள் உண்டு. அவைகளை நிவிர்த்திக்க நாங்கள் முயற்சிக்கின்றோம். சர்க்காரால் செய்து முடிக்க இயலாத வேலை இருக்கிறது. அது இந்தியர்களால் முக்கியமாய்க் கல்விப்பயிற்சியடைந்தவர்களால்தான் செய்து முடித்தல் கூடும். அம்முயற்சி நேர்மையாக நடைபெறின், தேசத்துக்கு நலமுண்டாம். நேர்மை இன்றி, தியவழியாக நடைபெறின் கெடுதி உண்டாம். அந்த நல்லவழி, தியவழி என்பவை அவர் அவர்களின் அறிவையும் உத்தரவாதத்தின் உணர்ச்சியையும் பொறுத்ததாக இருக்கின்றன. எல்லோரும் இந்தியா தேசமானது ஒருங்கு சேர்ந்து ஒரே ஜன சமூகத்தின் இயல்பினதாய் ஆகவேண்டுமென்று உங்கள் மனதில் எண்ணமுண்டாகிக் கொண்டிருக்கிறதென்று நான் நினைக்கிறேன். அது நல்ல எண்ணமே. உயர்வானதுதான். அது கொள்ளக்கூடியதுதான். அது எப்போதும் சிந்திக்கக் கூடியதுதான். அதற்காக முயற்சி செய்யவேண்டுவது தான். அதை விடாதேயுங்கள். அதை உம்மனத்தில் பற்றுமின். ஆனால் நீங்கள் மறக்கக்கூடாத சில முக்கியமான அம்சங்கள் கவனிக்கவேண்டியவை.

2. இந்தியா தேசமுழுவதும் ஒருங்கு சேர்ந்து ஒருஜனசமூகமாக ஏற்படவேண்டுமென்ற எண்ணம் நவீனமானது. முன்னர் இருந்திருப்பதில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இத்தேசத்திற்குக் கொடுத்திருக்கும் மேனாட்டுக்கல்விப்பயிற்சியின் பயனாய் அந்த எண்ணம் உங்களுடைய மனத்தில் உண்டாயிருக்கிறது. ஒரே ஜாதியாரென்று

நாம் கருதும்படியாக, ரோமானியர்கள் இருந்திருப்பதில்லை. கிரேக்ஜாதியாரும் ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருந்த சில்லறை நாட்டார்களாய் இருந்தார்களே அல்லாமல், எல்லாரும் ஒருங்கு சேர்ந்த ஒரே ஜாதியாரான ஜனசமூகமென்ற எண்ணம் அவர்களிடத்தில் உண்டாகவில்லை. இந்தியா தேசத்துப் பூர்வ சரிதத்தைப் படிப்பதால் ஒரே ஜாதியாரென்ற மனோபாவம் எப்போதும் இருந்திருப்பதே இல்லையென்பதை நீங்கள் அறிவீர்கள். பல ஜாதியார்கள் இந்த தேசத்தில் படையெடுத்தும், பல ஜாதியார்கள் குடியேறியும் ஒருவர் மற்றவரை தாழ்த்தியும், துரத்தியும், சிறுபான்மையாய் முன்னிருந்தவர்களுடனாவது தேசத்திலிருந்த பூர்வீகர்களுடனாவது கலந்து சம்பந்தித்தும், வந்திருக்கிறார்களென்றும், சரிதத்தால் தெரிய வருகிறது. இதனால் பலஜாதிகளின் குழப்பங்களும் ஆசாரங்களின் வேற்றுமைகளும் அவைகள் நேர்மையின்றிப் பலவாறாய் இருக்கின்றன. ஜாதியார்களையெல்லாம் ஒருங்கே சேர்த்துக் கட்டுப்படுத்தக்கூடியதான யாதொரு உடன்பாடும் சம்பந்தமும் ஒன்றும் இதுவரையில் நேர்ந்திருப்பதில்லை. ஜனங்களின் மனத்தில் அஃது உதயமாகவேயில்லை. தனித்தனியாய் அவரவர்பாடென்று வேற்றுமைப்படுத்தக்கூடிய அம்சங்கள் இத்தேசத்தில் அதிகமாய் இருந்துகொண்டுவருகின்றன. ஆங்கில ராஜாங்கம் இத்தேசத்தில் ஸ்தாபிக்கப்படுமுன், இத்தேசத்தின் சரித்திரம், சண்டைகள் சச்சரவுகள், போராட்டங்கள் இவைகளைப்பற்றியதாகவே இருந்திருக்கிறது.

3. இப்போது ஒழுங்கான ராஜாங்கம் இந்தியாதேசமுழுவதும் ஸ்தாபிக்கப்பெற்று இருக்கிறது. சமாதானம் எங்கும் பரவி இருக்கிறது. சண்டை, போர் முதலானவைகள் தொலைந்துவிட்டன. இந்தியா தேசமுழுவதும் ஒன்றாகி, ஒரே ஜனசமூகமாக ஏற்படும்படி பயிற்சிப்பதற்கு இது நல்ல உற்ற காலம். அவ்விதம் ஆவதும் சாத்தியந்தான். ஜனங்களை வேறுபடுத்தியும், ஒருவரோடொருவர் போராட்டம் செய்யவும், தூண்டும் அம்சங்கள் தடுக்கப்பட்டுவருகின்றன. இத்தேசத்தின்மேல் அன்னியர்கள் படையெடுப்பார்களென்ற பயம் அற்றுப்போய்விட்டது. தேசத்தின் எல்லைகளில் சிற்சில அற்பமான போர்கள் இருந்துகொண்டு வந்தபோதிலும், தேசமுழுவதும் ஒரே அளுகை நிகழும்போது ஜனசமாதானத்திற்கு

எவ்வித கெடுதியுமில்லை. நீங்கள் ஆழ்ந்து யோஜித்துப் பார்ப்பீர்களானால், பிரகிருத காலத்தில், பிரகிருத சௌகர்யம் நடைபெறும்சமயத்தில், இந்தியாதேசமுழுதும் ஒருங்குசேரும்படியாகவும் ஒரேஜனசமூகமாகவும் உண்டாவதற்கு முயற்சிகள் செய்யவேண்டுவதுதான். மேற்கண்ட சௌகரியங்கள் அற்றுப்போய் முன்போல் ஜனங்களுக்குள் குழப்பமும் போராட்டமும் தலையெடுக்குமாகில், இந்தியாதேசமுழுதும் ஒருங்குசேரவேண்டுமென்ற எண்ணம் குன்றும்படியாகவும் முடியும். தவிரவும், தேசத்தினுடைய அபிவிர்த்தியும் ஒருநூற்றுண்டின்அளவை காலத்தின் பின்னடைவதாகும்; மலினமாய்ப்போவதாகும். இந்தியா தேசத்திலுள்ள பலஜாதிகள் ஒருங்கு சேர்ந்து ஒரே ஜனசமூகமாக ஏற்பட்டு ஸ்வராஜ்ஜியம் நடத்தும்படியான யோக்கிதையை அடையும்படி, அவர்களை நல்வழிப்படுத்தல் நம்முடைய நோக்கமாகவும் நம்முடைய கடமையாகவும்இருக்கின்றது. இத்தேசமானது ஒருங்குசேர்ந்து ஒரே ஜனசமூகமாக ஏற்படுதலுக்குற்ற முயற்சியின் சின்னங்கள் இப்போது நடைபெறுகின்றன வென்றெனக்குத் தோன்றுகிறது. அவைகளில், கீழான ஜாதியார்களை, கைதூக்கிவிட ஏற்பட்டிருக்கும் முயற்சி ஒன்று. அது ஜனசமூகத்தில் சகோதர அன்யோன்ய பாவத்தை உண்டுபண்ணக்கூடிய தென்று நான் மதிக்கிறேன். (2) பம்பாய் என்ற பெரிய நகரத்தில் வியாபாரகாரியங்களுக்காக பலவாறான ஜாதியார்கள் ஒருவரோடொருவர் நேர்மையாக ஒழுகுகிறார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டியது. பம்பாய்ப் பட்டணம் போலவே இதர பெரிய பட்டணங்களில் பலவாறான ஜாதியார்கள் ஒருவரோடொருவர் சிநேகபாவம் கொண்டு நேர்மையாய் நடைபெறுகிறார்களென்று அறிகிறோம். இது மற்றொரு பெரிய நன்மையான காரியம். சுய அரசாட்சிசம்பந்தமான ஏற்பாடுகளான முன்சிபாலிட்டி, டிஸ்டிரிக்டு போர்டு, தாலூகா போர்டுமுதலியவைகள், இந்த தர்மங்களை ஜனங்களுக்குள் உண்டுபண்ணும் இயல்பினவைகளாக இருக்கின்றன. சட்ட நிர்மாணசபையில் ஜனங்களின் பிரதிநிதிகளை நியமிக்கும்படி ஏற்பட்டிருப்பதில், பல ஜாதியார்களின் முக்கியஸ்தர்கள், ஜனசமூகத்தின் அபிவிர்த்திக்குரிய, பொதுவான விஷயங்களைப்பற்றிப் பேசவும், அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவும் முயற்சிக்கின்றார்கள். இதுவும் நலம் தரும் காரியம்.

4. இவைகளால் ஏற்படும் அனுகூலங்களைத்தவிர, இன்னும் மற்ற அனுகூலங்கள் வேண்டப்படுவன. ஒரே ஜனசமூகம் என்ற பாவத்துடன், கடையராகத் தள்ளுண்ட கீழான ஜாதியார்கள் என்பவர்களும் இருத்தல் ஒவ்வாது, பொருந்தாது. அவ்விதம் இருத்தல் நலமன்று. அத்தன்மையான ஜாதியார்கள் இத்தேசத்தில் சுமார் 6 கோடி ஜனங்கள் இருக்கின்றார்களே!! ஜாதி, வர்ணங்களின் மாறாத வேற்றுமைகளும் அவைகள் பற்றிய ஆசார பேதங்களும், ஜனசமூகத்தின்கண் ஐக்கிய பத்தியம் உண்டாவதற்கு முற்றிலும் விரோதமானவைகள். சில சமயத்தில் கீழ்நாட்டு ஜாதியார்கள் என்று பொதுப்படையாய்ப் பேசுகின்றோம். கீழ்நாடுகளில் ஜப்பானியர் ஒருவர்தான் ஒரே ஜாதியாராகவும், ஒரே ஜனசமூகமென்று சொல்லத்தக்கவராவர். இனிமேல் சில வருஷங்களுக்குப் பின்னர் சீனர்கள் ஒரே ஜாதியின் சமூகமாக ஆவார்கள் போலத் தோன்றுகிறது. ஜப்பானியர்களின் சரித்திரத்தையும் அவர்களின் சுபாவங்களையும் நன்றாய் ஆராய்வீர்களேயாகில், அவர்கள் ஒருங்கு சேர்ந்து ஒரே ஜனசமூகமாக ஏற்பட்டிருப்பதற்குக் காரணத்தையும் அவர்களுக்கும், 'இந்தியஜனம் என்று சொல்லப்பெறும் பலஜாதிக்கூட்டங்களுக்கும் உள்ள வித்தியாசத்தையும், நன்றாய் நீங்கள் அறிவீர்கள்.

5. மேல்நாட்டுக் கல்விப்பயிற்சியின் ஒரு தீய பயனாக, பொறுமையின்மையும் ஆத்தரமும் அதிகமாக உண்டாகியிருக்கின்றன. அந்த சுபாவத்தைத் தடுக்கவேண்டும். உலகத்தில் உண்டாகின்ற பெரிய காரியங்கள் எல்லாம் தாமஸமாகவே சித்தி பெறுகின்றன. அவசரமும் ஆத்தரமும் கூடாது. பலவாறாகப் பேசப்படுகின்ற இத்தேசத்தின் பல ஜாதிக்கூட்டங்கள், ஒரே ஜனசமூகமாக அமைகிறதற்கு, அநேக தலைமுறைகள் செல்லவேண்டும். அந்த மேலான லக்ஷியம் கைவல்லியமாகவேண்டுமானால், அந்நோக்காக, ராஜாங்கத்தாருடன் சமாதானமாக, பொதுவும் அனுகூலமுமான காரியங்களின் சம்பந்தம் பெற்று, நீங்கள் ஒழுகவேண்டும். இதைத் தவிர, பல ஜாதியாருக்குள், ஒருவருக்கொருவர் நன்னம்பிக்கையையும், அந்நியோன்னியத்தையும், பொறுமை பாராட்டுதலையும், இதுபோன்ற பொதுவான தர்ம குணங்களையும் அபிவிருத்தியாகும்

படி செய்யவேண்டும். ஆங்கில தேசத்தினின்று, இந்தியாவில் கிறிஸ்து சபையார்கள், இத்தேசத்தின் ஏழைகளைக் கைதூக்கிவிட முயலுகின்றார்கள். கடையரெனத் தள்ளுண்ட கீழான ஜாதியர்களுக்குக் கல்வி கற்பித்தல் முதலிய கைங்கரிய முறையில் யாதேனும் நீங்கள் உதவி செய்தல் கூடாதா? ஏற்கனவே உள்ள பள்ளிக்கூடங்களில் அவர்களைச் சேர்ப்பதில் இப்போது இருக்கின்ற தடைகளை நீங்கள் விலக்கி, உங்களைப்போல சரிசமமாக அவர்களைப் பாவிக்க ஒண்ணாதா?

6. இராஜதந்திர விஷயங்களின் உண்மைகளை நீங்கள் அறிந்துகொள்ளப்படாதென்று, கவர்ன்மெண்டார்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் என நீங்கள் எண்ணுகிறீர்கள். அது தப்பான எண்ணம். மகா-ள-ள-ஸ்ரீ ராமலிங்கரெட்டியார் என்பார் சமீபத்தில் மைசூரில் சில வித்தியார்த்திகளின் சபையில் செய்த உபந்நியாசத்தில் அடியில்வருமாறு பிரஸ்தாபித்தார்:—

இராஜதந்திர முறைகளின் உண்மைகளைக் கற்கவேண்டுவது அவசியம்தான். அப்படிச் செய்யாவிட்டால், மூடத்தன்மையான, உபயோகமற்ற வீண்ஆவேசம் பூண்டு, கெடுதிகள் நீங்கள்செய்ய நேரிடும். அவர் அபிப்பிராயத்தில் நான் இணங்குகின்றேன். இந்தியா தேசத்தின் சரித்திரமும், இந்தியாதேசத்தின் ராஜாங்க முறையும், பள்ளிக்கூடங்களில் கட்டாயமாகக் கற்பிக்கவேண்டுமென பிரீத என் அபிப்பிராயமென நீங்கள் அறிவீர்கள். இராஜாங்கமுறையின் படிப்பு 'என்றால்' ராஜாங்கத்தார்மேல் துவேஷத்தை உண்டாக்கக்கூடிய உபந்நியாசமன்று என்பதை நீங்கள் உணரவேண்டும். அத்துவேஷ ஆரோபத்தினால், சமீபகாலத்தில் எத்தனை பாதகங்கள் உண்டாயிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். சில விஷயங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன என்பதினால் மாத்திரம் அவைகளை நம்பி, அவைகளின் ஆதாரத்தினால் பொய்யான ராஜதூஷணையான அபிப்பிராயங்களைக் கொள்ளுதலும்சொல்லுதலும்சரியல்ல. இத்தன்மையான அபிப்பிராயங்களால் தூண்டப்பட்டு அநேகர் கொலைமுதலிய பாதகங்களைச் செய்திருக்கிறார்கள்" என்பது அக்குற்றவாளிகளின் வாய்ப்பிறப்பே, தக்கசாக்ஷியாக இருக்கிற

ஞு. உங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு, அத்தன்மையான காரியங்களை புத்திமயங்கி, புத்திகெட்டு, செய்யப்படாதென்று உங்களுக்கு சர்க்காரால், எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியர்களுக்கு அநுகூலம் செய்துவந்த இரண்டு சிநேகிதர்களைக் கொலைசெய்த பாதகத்தொழில், ராஜாங்க முறையின் உண்மைகளைப் படிப்பதினால் விளைந்ததன்று. உண்மைகளைத் தீர்க்கமாய் ஆராய்ச்சிசெய்தால் ஒழிய, கண்டபடி தீர்மானம் கொள்ளுதல் நலமன்று; அக்கிரமுமாம். இராஜாங்க விஷயங்களை நீங்கள் வாசிக்கவேண்டுவதுதான். நீங்கள் சரியான வயது பெற்று புத்தியைச் சரியானபடி உபயோகிக்கத் திறமைபெற்றால், அதன்மேல், இராசாங்கவிஷயங்களைப்பற்றி சரியான தீர்மானங்கள், யோசனைகள் கொள்ளுதல் கூடும். அவை நன்மையாகவே முடியும்.

சிவராமசுப்பிரமணியன்.

## நன்மொழி.

83. இந்திரியங்களெல்லாம், வெளிநோக்கியே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அதினாலன்றோ, எல்லாஜனங்களும் வெளிநோக்காய் வெளிவிஷயங்களில் பற்றுள்ளவராய் இருக்கின்றார்கள். கோடியில் ஒருவன் வெளிநோக்கைத் தவிர்த்து, தனனுள்ளே நோக்குகின்றான், அந்நோக்கால், ஆனந்தம்பெறுவான். அவ்வானந்தமே பேரின்பவீடு. (கட உபநிஷத்).

84. கஞ்சா, புகையிலை, கள், இவைகளைத்தவிர். இவை உடலை உருக்கும், ஆயுளைக் குறைக்கும், மதியைக் கெடுக்கும், ஞானவித்தை வறுக்கும்.

85. நாம் போடும் உரத்தின் திறத்தால், புஷ்பங்களுக்கு வேறு வர்ணங்களையும், வாசனைகளையும் உண்டுபண்ணலாம். அவ்விதமே, நம்முடைய சுற்றத்தால், நம்முடைய குணங்களை மாற்றலாம், குணக்கேடு, அல்லது குண நலம் உண்டாக்கலாம். அதனால், குழந்தைகளின் பயிர்ச்சியில், இத்தர்மத்தை நினைந்து ஏற்ற சுற்றத்தை உண்டுபண்ணுக. தீயசுபாவம் குழந்தையினிடமிருப்பின், அதைப்போக்கும்படியான தகுந்த நல்ல சுபாவமுடைய தோழர்கள், நன்மை பயக்கும் சுற்றம் இவைகளை அமைத்தல் வேண்டும், நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.

## 5-ம் அதிகாரம்.

[முன் 361-ம் பக்கத் தொடர்ச்சி.]

### அபிவிர்த்தி முறையில் இரண்டு தர்மங்கள்.

---

1. ஆத்மா (புருஷன்) தன் சக்திகளை மேன்மேலும் தான் உறையிடமாகப் பெற்ற ஸ்தூல கோசங்களில், வெளிப்படுத்தும் முறை; இக்கோசங்களின் அபிவிர்த்திமுறை, ஆக இரண்டு முறைகள்.

2. முதல் முறையின் தர்மம், கர்மம் அதன் பலன் அதாவது தற்காலத்தில் வழக்கமாக வழங்கும் வார்த்தையாகிய கர்மம் அதன் விதியாம். ஸம்ஸ்கிருதபாஷையில் கர்மம் என்றால் செயல், தொழில் எனவும், அதன் பயன் அல்லது பலன் எனவும் பொருள்படும். செயலும், அதன் பலனும் இணைபிரியா இரட்டை அல்லது மிதுனம். மேல்நாட்டுப் பிரகிருதிப்பொருள்சம்பந்தமான சாஸ்திரத்தின் சித்தாந்தப்படி, செயலும், அதனால் உண்டாகும் பயனும் இரண்டும் நேர், நேர், சமம். எங்கே செயல் உளதோ, அதற்கு ஏற்ப, நேர் பலன் பலிக்கும். இது இன்றியமையாத விதி. வஸ்து வஸ்துக்களுடன் சம்பந்தம் உள்ளதாக இருக்கிறது. அச்சம்பந்தங்களின் பயனாய் அவை விகாசம் பெறுகின்றன. அபிவிருத்தியடைகின்றன. இதனால் தான், மனிதனின் சரீரங்களுக்கு விகாசம் பெறுதல் என்ற தர்மம் உண்டு. அச்சரீரங்கள் அமையப்பெற்ற திரவியங்கள் ஸ்தூலங்களாக இருந்தாலும், சூக்ஷ்மங்களாக இருந்தாலும், இந்த தர்மம் நடைபெறுகிறது. பிரகிருதி திரவியம் எப்போதும் ஓயாமல் சலித்துக்கொண்டே இருக்கின்றது. பிரகிருதியை உபாதியாகக் கொண்ட ஆத்மாவும் அந்த விதியைத் தாண்டமுடியாது. ஆத்ம சைதந்நியத்தில் (புருஷனிடத்தில்) உண்டாகும் ஒவ்வொரு இச்சை, எண்ணம், சங்கற்பங்களுக்கும் நேராக, அந்த ஆத்மா (புருஷன்) இயங்குகின்ற உபாதியான கோசங்களில் ஒரு சலனம், கம்பனம் உண்டாகியே தீரும். அவ்விதமே, வெளி தாக்குகளினாலும், வேறு ஜீவர்களாலும், கோசங்களில் உண்டாகும் சலனங்கள், கம்பனங்கள் அவைகளுக்கு ஏற்ப நேர்நேராய் ஆத்ம

சைதந்நியத்தில் (புருஷனிடத்தில்) சில மாற்றங்களை உண்டாக்குகின்றன. இந்தன்மையாக, பிரகிருதி, புருஷர்களுக்குள், இன்றியமையாத பரஸ்பரக் கூட்டுறவான சம்பந்தங்கள் ஏற்படுகின்றன. இச்சம்பந்தங்களைத்தான் பொதுவாய், கர்மவிதி என்றும் காரண காரிய பரமபரையான விதி என்றும், பிரகிருதி விகாசமுறையின் விதி என்றும், சொல்லுகிறது.

3. இரண்டாவது தர்மம் யஞ்ஞவிதி, அல்லது தியாக தர்மம் என்பதாம். எப்படி பிரகிருதியின் விகாசமுறையில், கர்மம், கர்மவிதிப்படி தவறுமல், நடைபெறுகிறதோ, அப்படியே, ஆத்ம சம்பந்தத்தில், (புருஷ சம்பந்தத்தில்) தியாகம் என்ற விதியானது தவறுமல் நடைபெறுகிறது. கர்மவிதியால், சரீரங்கள் அல்லது கோசங்கள் எவ்விதம் விர்த்தியடைந்து மேன்மேலும் விகாசம் பெறுகின்றனவோ, தியாகம் என்ற விதியால் (புருஷன்) ஜீவாத்மா தன்னுள் அமைந்துள்ள சக்திகளை மேன்மேலும் வெளிப்படுத்துகிறுன். நேராகக் கொண்டுசெலுத்தப்பட்ட கர்மங்களால், சரீரம் விகாசம் பெறுகிறது. அவ்விதமே, யக்ஞம் அல்லது தியாகத்தால், ஜீவாத்மா (புருஷன்) இயங்குகிறுன், உயர்நலம் பெறுகிறுன். இதுபற்றி அன்றே அடியில்வரும் ஞான உபதேசம் ஏற்பட்டுள்ளது. "தன்னுயிரை ஓம்புகிறவன் அதை இழப்பான்; தன்னுயிரை இவ்வுலகில் வெறுப்பவன் அழியாத நித்தியத்துவத்தைப் பெறுகிறுன்."*. "பெறுதலைவிட கொடுத்தலே நன்று."§

4. இயற்கைவிதி என்பது ஈசுவரசக்தியின் காட்சி அல்லது வெளித்தோற்றம். அது என்றும் நிகழும். அது என்றும் மாறுத்து. அதன்சம்பவத்தைத் தவிர்க்கவொண்ணுது, அதை அலக்ஷியஞ்செய்வோம்; செய்தால், அதன் பலன் கைக்குமேல் சித்திக்கும். அதாவது துன்பம் அடைவோம். பாறையின்மேல் மோதிக்கொண்டாற்போல, அதை எதிர்த்தால், துன்பம் சம்பவிக்கும். நம்மைக் காயப்படுத்திக்கொள்ளுவோம். இயற்கைவிதிக்கு, சம்மானம், அல்லது தண்டனை அளிப்பார் அங்கில்லை. ஆனல், இயற்கை விதியுளது என்பதை, அதன் பலன்களால் அறிவோம். அவ்விதியுடன் நேர்மையாய் நலம் பெறுவோமானுல், சுகிர்தம் உண்டாம், அதை எதிர்த்து நடைபெறுவோமானுல், துக்கம் உண்டாம்.

---

* St. John, XII—25. § Acts XX—35.

## கர்மப், கர்மவிதி.

5. *ஈசுவர சங்கற்பம் சத்தியத்தையே நோக்கியது. அதை அறியாமல் அவமதிப்பவர் வருந்துவார். அதனால்தான் ஞானி களும், தீர்க்கதர்சிகளும்,* சத்தியத்திற்கு விரோதமான காரியம் துன்பம் பயக்கும் என, அடிக்கடி வற்புறுத்திக் கூறிக்கொண்டுவருகிறார்கள். பகவான் புத்தர் சொல்லுகிறதாவது:—

"வண்டியின் சக்கரம், வண்டியை இழுக்கும் எருதைப் பின் தொடர்ந்து போதல் எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக, தீய எண்ணத்துடன் பேசுகிறவன், தீயதொழிலைச் செய்கிறவன், துன்பத்தை அனுபவிப்பான். அவ்வண்ணமே, தன்நிழல் தன்னை விட்டு அகலாததுபோல, நன்மையானஎண்ணத்துடன்பேசுகிறவன், நன்மையான தொழிலைச் செய்கிறவன் சுகிர்தம் பெறுவான்." *

இவ்விதமே, பால் என்ற ஞானியாரும் அடியில் வருமாறு உபதேசிக்கின்றார்:—

"மோசம் போகவேண்டாம். கடவுளை வஞ்சிக்கமுடியாது. ஒருவன் எதை எதை விதைக்கிறானோ, அதை அதை அறுப்பான்."

6. பிரகிருதி லோகத்தில், (physical world), இயற்கைப் பொருள்களின்கண் நிகழும் சம்பந்தங்களின் விதி, என்றும் மாறாதது, என்று யாவரும் அறிவார்கள். நெருப்பு சுடும், பூமி இழுக்கும்; எறிந்த கல் கீழே விழும்; சூரியனுக்கு எதிரில் வானவிற்போடும்; மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை, இவை போன்றவை. ஒரு விதியைத் தெரிந்து, அதற்கெதிரான மற்றொரு விதியின் பலத்தை யுக்தியாக மாற்றல் கூடும். அவ்விதமாக, லக்ஷியமான கருத்தை சாதிக்கலாம். பிரகிருதியின் தர்மங்களை அறிந்து, அவைகளை ஒப்புக்கொண்டு அவைகளின் வழியே நடைபெற்று பிரகிருதியை ஜயிக்கலாம், வசமாக்கலாம். பிரகிருதியின் விதிகள் மாறாதவைகளாக இருக்கின்றமையால், பிரகிருதி சம்பந்தமான சாஸ்திரம் என்பது உண்டு. பிராகிருதலோகங்களில் விதி எவ்விதம் மாறாத

---

* Dhammapada I-i-2.

இயல்பினதாக உளதோ, அவ்விதமே, சூக்ஷ்மமான அப்பிராகிருத லோகங்களிலும் விதி அவ்விதமே மாறாத இயல்பினதாகஉள்ளது. எல்லா லோகங்களும் கடவுள் அமைப்பு. எல்லா லோகங்களும் அவரால் தாங்கப்படுகின்றன. அந்தவிதி கடவுளால் நியமித்தது: அது முப்பான்மையாக நடைபெறுகிறது. முப்பான்மை என்பது எங்குமுள்ள தர்மம். நாமும் முப்பான்மைபற்றியே நிகழ்கின்றோம்.

7. நமக்கு இச்சா, ஞான, கிரியை, என்ற மூன்று சக்திகள் இருக்கின்றன. அவைகளில், இச்சா சக்தி, ஆசையாகத் தோன்றிட, விருப்பமானவஸ்துக்களைப் பற்றிக்கொள்ளுகின்றோம். வெறுப்பான வஸ்துக்களை விலக்குகிறோம். அதிக ஆவலுடன் விரும்பும் வஸ்துக்கள் நம்மை அடைகின்றன. நம்முடைய விருப்பு வெறுப்பால் ஏற்பட்ட செய்கைகளின் பயனாய், வஸ்துக்களும், இதர மனிதர்களும், நம்வசமாகிறதும் நம்மைவிட்டு விலகுகிறதுமாக ஏற்படுகின்றன. அவன் அதிர்ஷ்டசாலி என்றால், திவிரமான ஆசைகள், இச்சாசக்தியுள்ளவன் என்பது பொருள். அவன் விரும்பும் விஷயங்கள் அல்லது வஸ்துக்கள், அவனால் ஒருவித நுண்ணிய ஆகர்ஷண சக்தியால் (Magnetism) சுவீகரிக்கப்பெறுகின்றன. அச்சக்தி பலிக்கவேண்டுமானால், குறித்த விஷயத்தைப்பற்றிய அவன் விருப்பம் மாறாது இருக்கப்பாலது. உலகத்தைத் நிர்க்கமாய் ஆராய்ந்து பார்க்கின், இச்சக்தி எங்கும், நம்மிடமும் பிறரிடமும்; இயங்குவதாக அறிவோம். ஈசுவரனின் இச்சாசக்தியானது நம்மிடம் இச்சையாகப் பிரதிபிம்பிக்கிறது, "இருப்பாயாக" அதோபார் இருக்கிறது.*

இத்தாலியாவின் கவிசிரேஷ்டரான, தாந்தே என்பவர் ஈசுவரனைக்குறித்துச் சொல்லுகிறபடி, "இச்சையும் (சங்கற்பமும்) தொழிலும் ஒன்றேயாய் அவரிடம் அமைந்துள்ளன." என்ற அபிப்பிராயம் இங்கு கவனிக்கத்தக்கது.

8. நம்முடைய நினைப்பின்வழி, நம் சீலம் அமைகிறது. நினைப்பு திரும்பத் திரும்ப மனத்தில் ஏற்பட, அது பழக்கமாகப் பரிணமிக்கிறது. அப்பழக்கமே ஸ்திரமான சீலமாக அமைகிறது;

---

* Al. Quoran II-117.

அல்லது சிலத்தின் ஓர் அம்சமாக அமைகிறது. சங்கற்பமானது கர்மத்தின் (தொழிலின்) காரணம். ஞானக்கண்ணுக்கு கர்மத்தின் (தொழிலின்) குப்தமான பாகம் சங்கற்பமாம். "மனத்தால் ஒருவன், ஒரு ஸ்திரியை இச்சைகொள்ளுவானாகில், அந்நிமிஷமே, அவன் வியபிசாரம் செய்தவன் ஆயினான்" * என்னும் ஏசுகிறீஸ்து என்பார் வசனம் இங்கு கவனிக்கத்தக்கது. மனது எதை சங்கற்பிக்கிறதோ, அதை சரீரம் (கர்மேந்திரியம்) தொழிற்படுத்துகிறது. "புருஷன் (மனிதன்) சங்கற்பத்தால் சிருஷ்டிபெறுகிறான். ஒரு ஜன்மத்தில் எதை சங்கற்பிக்கிறானோ, அவ்விதம் மறு ஜன்மத்தில் ஆகிறான்" † "நாம் முன் சங்கற்பத்தின் பயனாக இருக்கிறோம். பிரகிருதநிலை முன் நினைப்பின் காரியம். முன்னினைப்பால் இந்நிலை அமைந்துள்ளது." ‡

9. நம்முடைய கர்மத்தின் (தொழிலின்) பயனாப், நாம் பிறரைநோக்கிச்செய்யும் செயலின்பயனாய், நம்மிடத்தில்ஒருஸம்ஸ்காரத்தை (மாற்றத்தை) உண்டுபண்ணிக்கொள்ளுகிறோம். பிறரிடம் சந்தோஷம் பரவும்படி செய்கிறதினால், அச்சந்தோஷம் நம்மிடம் திரும்புகிறது. பிறருக்குத் தீங்கு விளைவித்தோமானால் அதுவும் நம்மிடம் துன்பரூபமாகத் திரும்பிவர, நாம் அனுபவிப்போம்.

10. இந்த தர்மமானது கண்டிப்பாயும் கடுமையானதாயும் நிகழ்கின்றமை மெய்தான். பிராகிருத பிரபஞ்சதர்மங்களையும் விதிகளையும் போல, இந்த தர்மம் நடைபெறுகின்றது. இம்முறையால் தான் ஈசுவரன், தம்முடைய சங்கற்பத்துடன், நம்முடைய இச்சைகளை நேர்மையாக நாம் கொண்டுசெலுத்தும்படி செய்விக்கின்றார்.

நன்மையாக ஒழுகினால் சந்தோஷமும், தீமையாக ஒழுகினால் துக்கமும் உண்டாகின்றன என்பதான விதிமுறையால், பிரபஞ்சத்தை நடத்தும் ஈசுவரனின் சங்கற்பம், இது என அறிந்து, அதை அனுசரித்து நாம் நேர்மையாக நடைபெற முயலுகிறோம். மனிதன் இஷ்டமான விதையை விதைக்கலாம். விதைத்தமேல்,

* St. Mathew V-28. † Chandogya Upd. III-xiv-1; xiv-1.
‡ Dhammapada I-i.

பலன் விதையின் நலத்தைப்பொறுத்ததாக இருக்கிறது. மற்று வேறொன்றையும் நோக்குகின்றதில்லை. அதனால், அநுபவத்தால் வர வர, நல்ல விதையை நாடித் தெரிந்துகொள்ளுகிறான்.

11. பிரபஞ்சம் இத்தன்மையாக விதிபற்றியே நிகழ்கின்றது. அதனால் மனிதன், தைரியமாய் நன்னம்பிக்கையுடன் உலகில் நடைபெறலாமன்றோ? நல்ல இச்சைகள் நல்ல விஷயங்களைக் கூட்டும்; நல்ல சங்கற்பங்கள் நல்ல சீலத்தை உண்டாக்கும்; நல்ல காமம் (தொழில்) நல்ல சுற்றத்தை அமைப்பிக்கும். ஆகவே, ஆத்மாவின் உபாதிகளான சரீரங்கள் அதற்குவரவர நேர்மையான கருவிகளாக, அமைவுறும். கடைமுறையில் அச்சரீரங்கள் உயர்நலமுடையவையாக விகாசம்பெறும்.

## யக்ஞவிதி அல்லது தியாகமுறை.

12. யக்ஞம் என்பது பிறர் நலம் பெற, பிராணகலையின் வெளிப்பிறக்கமும் பெருக்கமுமாம். இது, மேன்மேலும் விகாசம் பெறும் ஆத்மாவின் தர்மம். இந்த தர்மம் தான் உலகங்களை சிருஷ்டிக்கிறதும், காத்தலுமாம். உலகத்திலுள்ள, எல்லாமதங்களிலும், ஈசுவர சிருஷ்டியின் முதற்காரணம், தியாகமான யக்ஞதர்மமென, உபதேசிக்கப்பெற்றுள்ளது. ஹிந்து மதத்தில், சிருஷ்டியின் உதயம், யக்ஞகுதிரையாக, உருவகப்படுத்தியுள்ளது. * உலகங்களை சிருஷ்டிப்பதற்காக, பரமபுருஷனே, யக்ஞத்தில் ஹவிஸாக ஆகுதிசெய்யப்படுகிறான் என்று ரிக்வேதம் புருஷசூக்தத்தில் சொல்லியிருக்கின்றது. கிறிஸ்துவர்கள் மதகிரந்தத்தில், "உலகத்தின் அஸ்திவாரம் ஏற்பட்ட காலத்தில் பலிபோடப்பெற்ற ஆட்டின்" பிரஸ்தாபம் உள்ளது. † ஜோராஸ்திரியர் சொல்வதாவது "பூலோகமும் சுவர்க்கலோகமும் இல்லாதகாலம் நிகழ்ந்தது. • ஜர்வேன் (Zervane) என்பார், யக்ஞத்தினால், சிருஷ்டிகர்த்தாவாகிய ஆஹுர்மாஜடா (Ahurmazada) வை ‡ வெளிப்படும்படி செய்வித்தார். பரமாத்மாவே தம்மிடமிருந்து சக்தியை வெளிப்படுத்தி, அதன்

---

* Brihadaranyaka Upd. I-i-1.

† Revelations XIII–8.

‡ Essays on the Parsis-Dr. Hang p. 13.

மூலமாய், பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார் என விளங்குகின்றது. இதனால், யக்ஞவிதி அல்லது தியாகமே பிராண இயக்கத்தின் தர்மமென வித்தாந்தப்படுகிறது. இதனால், ஆத்மாவுக்கு, தியாகம் சரீரத்திற்குப்போல, துக்ககரமான தன்று என்றும் சுககரமானது (சந்தோஷகரமானது) எனவும் நாம் உணரற்பாலது. ஞானியானவன்,

"ஈசுவரஞான தேஜஸைக் கொண்டுவரும் சுமைக்காரனாகவும், அவர் காருண்ணியத்தை வெளிக்காட்டவரும் தூதனாகவும், அவர் ராஜ்ஜியத்தில் கைங்கரியம் செய்யும் சேவகனாகவும், தன்னைக் கருதுவான். தான் ஜீவித்தலுக்கு அவைதான் முக்கியமான நோக்கமாக மதிப்பான். மனிதன் மேன்மேலும் விகாசமுறையில் அபிவிருத்தி அடைதலைத் தூண்டுவதற்காகவும், உயர்நலம் உள்ள தர்மமுறையைச் செலுத்தவும், உலகத்தைக் கீழாக அழுத்துகின்ற பாபமூட்டையை கொண்டு ஒருவாறுதான் ஏற்றுக்கொண்டு அந்த பளுவைக் குறைக்கவும்,இவைகளைச் செய்தலே சந்தோஷமாக இறைவன் கருதுகிறார் எனத் தோன்றுகிறது" *

13. ஈசுவரசைதந்யத்தினின்று நேராக வெளிவந்திருக்கின்ற ஆத்மா, வற்றாத ஊற்று. எவ்வளவுக் கெவ்வளவு, அவ்வூற்றினின்று நீர் வெளியேறுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு, அவ்வூற்றில் நீர் ஊறும். பிராகிருத உலகங்களில், முடிவில்லாத காரண காரிய பாரம்பரை, நிகழ்வதில், கர்மத்தால் உலகம் பந்தத்திற்குள்ளாகிறது ※ உண்மையாகவே, செய்யப்படும். ஒவ்வொரு கர்மம் ஓர் ஓர் பந்தமாம். ஆனால் ஈசுவரார்ப்பணமாக, ஈசுவரசங்கற்பத்தை நிறைவேற்றும் வண்ணம், செய்பவன் தனக்கு என்று ஒன்றுமேனும் ஸ்வப்பிரயோஜனமாகச் செய்யாமலும், பிறர் நயம் பயக்குமாறு யக்ஞமாக "இறைவனே! உம்முடைய சித்தப்படி இதோ செய்கிறேன்" ‖ எனச்செய்தால், அக்கர்மம் பந்தத்தையுண்டாக்

* The Ancient Wisdom p. 287.

※ Bhagavat Gita III-9.

‖ Hebrews X-9.

காது. ஏனெனில், செய்பவன் தனக்காகச் செய்யாமல், பரமபுருஷனே அவன்மூலமாகச் செய்கிறான் அன்றோ? "யக்ஞரூபமான கர்மத்தைத்தவிர ஏனையகர்மம் பந்தப்படுத்தும்" என உபதேசமுள்ளது.* இதுதான் உண்மையான சுதந்தர பதவிக்கு வழி. பிரகிருதி அதன் செயலால் பந்தத்துக்குள்ளாக்கும். புருஷனே தியாகத்தினால் பந்தத்தினின்று விடுவிப்பன். இதைத்தான் பிரகிருதியை புருஷன் ஜயித்தல் எனச் சொல்லப்படுகிறது. மனிதனை ஆன்மா சரீரங்களை ஜயித்து, தாழ்த்தி, சித்தியனாகிறான். ஜீவாத்மா வேற்றுமை பாவம் நீங்கப்பெற்று, தன் சங்கற்பம் ஈசுவரசங்கற்பத்துடன் ஒன்றுபட்டவனாகி, "எல்லாம் ஈசன் செயல்" † என அறிந்து, "தன் சரீரத்தை,அவருக்கே ஏற்கும்படியாக, தான் ஜீவதசையில் தியாகம் செய்கிறான்." ‡

**A. B.** ப. நா.

## நன்மொழி

86. எல்லாரும் பிராணாயாமப்பயிற்சி செய்தற்கு அருகரல்லர். பிராணாயாமம் பழகுமுன், மதுமாமிசாதிகளை முற்றும் தவிர்த்து சாத்விக உணவு, நேர்மையான மனம், மாசற்ற கொள்கை, குறுகிவரும் ஆசை, இவைகளை அனுஷ்டிக்க வேண்டும். இன்றேல், பிராணாயாமம் பெருகிய கேட்டை விளைவிக்கும், மூளைபிறழும், பயித்தியம் உண்டாகும்.

87. தானம் செய்மின். பாத்திரம், இடம் காலம், அறிந்து செய்மின். நேர்மையான மனிதன், புண்ணிய க்ஷேத்திரம்,புண்ணிய காலம், இவைகளை கவனிக்க வேண்டும். உத்தமர் எதிர்ப்படின், இடம், காலம் அவ்வளவு முக்கியமன்று. தீயவர்க்கு கொடுக்கும் தானம் எக்காலத்திலும் துன்பத்திற்கு வித்தாகும். மீன்பிடிக்கிறவனுக்கு தூண்டில், வாங்க பணங்கொடுத்தால், பாவமே விளையுமாறு போல. அதனால் கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொடு. பாத்திரம் அறிந்து பிச்சையிடு, என்ற பழமொழி வழங்குவது.

* Bagavat Gita-III-9.

† Al. Quoran-II-83.

‡ Romans XII-1.

# இகபர வாழ்க்கை.

இகபர வாழ்க்கை எனற்கு இக வாழ்க்கையும் பர வாழ்க்கையும் எனப்பொருள் தோன்றும். இக வாழ்க்கை யென்பது:—நமது கண்ணுக்குத் தோன்றும் கரசரணுதி அவயவங்களுடன் மக்களாகப் பிறந்து வளர்ந்து மனைவி மக்களுறவினர்களுடன் உண்டு உடுத்துச் சுகித்து இவ்வுலகத்தில் வாழும் வாழ்க்கையாகும். பர வாழ்க்கை யென்பது:—ஸ்தூல சரீரத்தை விட்டு நீங்கிய உயிர் சூக்கும காரண சரீரமென்று நூல்களின் மூலம் தெரியப் பெறுதலன்றி, கட்புலனுகாத அருவநிலையைப் பெற்றுப் பரலோகத்தில் அதாவது அவ்வுலகத்தில் வாழும் வாழ்க்கையாம். ஆகவே இந்த இரண்டிடத்தும் சுகதுக்கங்களை அநுபவிப்பது ஆத்ம அறிவேயாம். அந்த ஆத்ம அறிவானது இப்பூவுலகத்தில் இப்பிறவியில் அடையும் சுகதுக்கங்களை இகவாழ்க்கை யெனவும், இப்பிறவியை நீத்து அதாவது ஸ்தூலமாகிய இவ்வுடலை விட்டிறந்து தான் அருப நிலையையுற்று அநுபவிக்கும் சுகதுக்கங்களே பரவாழ்க்கை யெனவும் வெளியாகும். அந்த உலக வாழ்க்கையின் கதி நலமாயிருத்தலும், தீமையாக இருத்தலும் இந்த உலக வாழ்க்கையைப் பொறுத்ததாக இருக்கின்றமையாலும், செயல் இவ்வுலகத்திலும் அதன் பயன் அல்லது அநுபவம் அவ்வுலகத்திலும் நேரிடுவதாலும், இகத்திலேயே பரத்தில் பலன் கொடுக்கும் வித்தைப் போடுகின்றோம். அப்பலன் நலமுள்ளதாக வேண்டுமானுல் அதற்கு ஏற்ப நலமுள்ள வித்தை இவ்வுலகத்தில் இடவேண்டும்.

இவற்றில், முன்னுள்ளதாகிய இக வாழ்க்கையோ நாம் தினமும் அநுபவித்து வருவது. பின்னுள்ள பரவாழ்க்கையோ நாம் காணக்கூடாதது. இப்படியாக இங்கே இகபரவாழ்க்கை யென்று எடுத்துக் கூறவந்ததில் என்ன விசேட மிருக்கிறது, என்று சிலர் நினைக்கலாம். நம் கண்ணுக்குத் தோன்றும் எந்தச் சிறுபொருளையும் உற்று நோக்கி ஆராய்ந்தால் அதிலிருந்து பற்பல அற்புதங்களைக் காணலாம். உற்று நோக்காது மேற்போக்காகக் கண்டால் யாதொரு விசேடமும் தோன்றுது. அவ்வாறே நாம் எடுத்துக்கொண்ட இகபரவாழ்க்கை என்ற விஷயத்தையும் உற்று நோக்கினுல், பலவகை

யான விசேடங்கள் புலப்படுவனவாகும். ஆனது பற்றியே இவண் இவ்விஷயம் எழுதப்பட்டதெனக் கொள்க. பாலப் பருவத்திலே குழந்தைகள் சிறு வீடு கட்டி மணற் சோறு சமைத்தும், இரண்டு கற்களையாவது மரத்துண்டுகளையாவது வதூவரர்களாக வைத்து விவாகம் செய்தும், மற்றும் மரத்துண்டுகளைப் பிள்ளைகளாகப் பாவித்தும் விளையாடுவதை நாம் பார்க்கிறோம். இவ்வித விளையாட்டுகளெல்லாம் அப்பாலியர்கள் பாலப் பருவத்தைக் கடந்து குமரப்பருவத்தையடையுங்கால், அவர்களின் மெய்ச்செயல்களாகவே ஏற்படும். பின்னே வரும் மெய்ச்செயல்கள் முன்னே பொய்ச் செயல்களாக வெளிப்பட்டதன்றி வேறில்லை. அம்மெய்ச் செயல்கட்கு அதிகாரிகளாகிய குமரப் பருவத்துமக்கள் தாம் முன்னே பாலப்பருவத்தில் பொய்ச் செயல்களாகச் செய்து வந்த சிறு வீடுகட்டுதலாகிய தொழில்களை மறுத்தலுடன் ஏளனமுஞ் செய்குவாராவர். உண்மையில் முன் பாலப்பருவத்தில் நடந்த விளையாட்டுக்கள், பின் மனித பருவத்திற்கு, பழக்க முறைகளாகும்.

இவ்வண்ணமே ஒவ்வொருவரும் இகத்தில் செய்யுங் காரியங்களெல்லாம் பரவாழ்க்கையை நோக்க, பொய்க்காரியங்களாகிய சிறு வீடுகட்டுதல் போன்ற விளையாட்டு வீண்காரியங்களாகவே தோன்றிடினும் உண்மையில் பழக்க முறைகளாம். பரவாழ்க்கையையனுபவிக்குமொருவர் இகவாழ்க்கையைவெறுத்து ஏளனமுஞ் செய்குவர். இஃதென்ன? பொருத்தமாகத் தோன்றவில்லையே. சிறு வீடு கட்டுதலாகிய தொழில்களைச் செய்த பால்யர்கள், பெரியரான போதும் அவ்வகைத் தொழில்களையே செய்கின்றமையால் அவை இரண்டும் ஒப்பாகும். அவ்வாறே, இகவாழ்க்கையிலுள்ளன வெல்லாம் பரவாழ்க்கையிலும் இருப்பினல்லவோ இவ்விதம் கூறலாம். இகவாழ்க்கையின் தன்மை வேறு, பரவாழ்க்கையின் தன்மைவேறு, அல்லவோ? அப்படியிருக்க, பாலப்பருவச்செயலும் குமரப்பருவச் செயலும் ஒத்தாற் போல இக வாழ்க்கையும் பரவாழ்க்கையும் ஒப்புமை பெறுதல் இல்லையே. ஆதலின் இங்ஙனம் கூறுதல் பொருந்தாது, என்று ஆக்ஷேபனை வரலாம். இந்த ஆக்ஷேபனைக்குச் சமாதானமாகவே, இகபரவாழ்க்கையின் ஒற்றுமைத் தன்மையை விஸ்தரித்துக் காட்டுவோம்.

| இகவாழ்க்கை. | | பரவாழ்க்கை. | |
|---|---|---|---|
| (1) | குடியரசு. அதாவது பிரஜாதிபத்திய வாழ்க்கை. | (1) | நாஸ்திகம் தானே தலைவனன்றித் தனக்கு மேல் தலைவனில்லையென்பது. |
| (2) | முடியரசு ராஜாதிபத்திய வாழ்க்கை. | (2) | ஆஸ்திகம் கடவுளொருவருண்டெனக் கொள்வது. |
| (3) | அரசன் | (3) | கடவுள் |
| (4) | பிரஜைகள் | (4) | ஜீவகோடிகள் |
| (5) | செங்கோல் | (5) | அறவாழி |
| (6) | காத்தல் | (6) | அருள் செய்தல் |
| (7) | இறைப் பொருள் | (7) | அன்பு |
| (8) | கல்வி. இதுதற்காலம் மெற்றிக்குலேஷன், யப். ஏ., பீ. ஏ., எம். ஏ., என நால் வகைப்படும் | (8) | ஒழுக்கம். இதுசரியை, கிரியை, யோகம், ஞானம் என நால் வகைப்படும் |
| (9) | சட்டங்கள் | (9) | வேதாகமபுராணேதிகாச நூல்கள் |
| (10) | உத்தியோகங்கள் | (10) | தநுகரண புவன போகங்கள் |
| (11) | உயர்த்தல், பிரமோஷன் செய்தல் | (11) | சுவர்க்கமுதலியமேற்பதவியீதல் |
| (12) | கீழிறக்கல் தாழ்ந்த வேலைக்குத் தள்ளல் | (12) | மிருகம் புழுமுதலிய தாழ்ந்த ஜன்மத்திற் சேர்த்தல் |
| (13) | குற்றம் | (13) | பாவம் |
| (14) | தண்டனை (ஜயில்) | (14) | நரகம் |
| (15) | தண்டத் தலைவர் | (15) | யமபடர்கள் |
| (16) | செல்வம் | (16) | அறம் |
| (17) | வறுமை | (17) | அறமின்மை |
| (18) | திருடர்கள் | (18) | காமக்குரோதமாதியன ௬ |
| (19) | பிணி | (19) | பாசம் |
| (20) | வயித்தியன் | (20) | குரு |
| (21) | மருந்து | (21) | உபதேசம் |
| (22) | பத்தியம் | (22) | சன்மார்க்கம் |
| (23) | தேகசுகப் பேறு | (23) | ஞானப் பேறு |
| (24) | இளைப்பாறுதல் (பென்ஷன் பெற்றிருத்தல்) | (24) | இருவினையொப்பு, மலபரிபாகம் பெறல் |
| (25) | கஷ்ட ஜீவனம் | (25) | பிறவித்துன்பம் |
| (26) | சுக ஜீவனம் | (26) | முத்திப்பேறு. |

மேலேகாட்டியபடி இகவாழ்க்கைக் குரிய 26ம் நமது ஜீவிய கால முழுதும் நிகழ்க்காண்பனவும் அவ்வாழ்க்கைக்கு உரியனவுமாம். அங்ஙனமே பரவாழ்க்கைக்குக் காட்டிய 26ம் அதற்குரியன. இனி இவைகளிற்சிலவற்றினியல்புகளைச் சற்று விரித்துக் கூறுவாம்.

(1) குடியரசு வாழ்க்கைக்குத் தலைவனில்லாமைபோல் நாஸ்திகர்க்கும் கடவுளில்லை. ஆகவே அவர்க்கு அடியிற் குறிக்கும் விஷயங்கள் சம்பந்தப்படா.

(2) முடியரசு நாடுமுழுதும் அவ்வரசன் கட்டளைப்படி அல்லது உத்தியோகஸ்தர் கட்டளைப்படி நடக்க வேண்டும். ஆஸ்திகரும் அவரவர் கடவுளாலும் அவரருள்வழிப்பட்ட மகான்களாலும் இடப்பட்ட கட்டளையின்படியே நடக்கவேண்டும்.

(3) இகத்துக்கு அரசன் தலைவனாதல் போல பரத்துக்குக் கடவுள் தலைவராவர். இதனை "அனைவோர்க்கும் தெய்வம், இலைமுகப் பைம்பூண் இறை" என்னும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் திருவாக்காலுங்காண்க.

(5) செங்கோலும் அறவாழியும் ஒக்கும். இதனை "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலரிது" என்ற திருக்குறள் வாக்காலுங் காணலாம்.

(6) அரசன் பிரஜைகளைக் காக்குமிடத்து, தன்னாலும், தன் பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், விலங்குகளாலும் பயமுண்டாகாமற் காக்கவேண்டும். கடவுளுடைய திருவருளும் உயிர்களினுடைய மெய்வாய் கண் மூக்குச் செவியென்னும் பஞ்சேந்திரியங்களால் வரும் ஆசைத் துன்பத்தை நீக்கியருளுவதாகும். கடவுளின் அருள் நோக்கம் சிறிதாவது பெற்றாலன்றி இவ்வாசைகளை வென்று இறைவனடி சேர்தல் முடியாது. இதனாற்றான் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றார் ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள். இதனால் அரசன் காவல் புறப்பகைத்துயர்களை நீக்கவேண்டுவதுபோல், கடவுளினருள் அகப்பகைத் துயர்களைப் போக்கவேண்டுவதாகும்.

(7) குடிகள் அரசனுக்குப் பகுதிப்பொருள் செலுத்தக் கடமையுடையவர்கள். செலுத்தாவிடில் அரசனே குடிகளைத் தண்டித்து வலிந்து அப்பொருளைப் பெறுவான். ஆன்மாக்கள் கடவுளிடத்து அன்பு செலுத்தக் கடமையுற்றவர்கள். செலுத்தாவிடில், அவர்கட்கு அறிவுறுத்துமாறு கடவுள் பலவகைத் துன்பத்தைத் தந்து அறிவைக் கொடுத்து அன்பைப் பெறுவர். துன்பமுற்றவர்கள் யாவரும் கடவுளுக்குப் பக்தி செலுத்துவது உலகியல்.

(8) கல்வியில் தேர்ந்தவர்களாகி அவரவர் பெற்ற பட்டங்கட்கேற்ப உத்தியோகம் பெறுதல் போலவே ஒழுக்கமுடையராய் அவரவர் நின்றபடிக்குத் தக்கவாறு தநுகரண புவன போகங்களையடையும்படி ஆன்மாக்கட்குக் கடவுள் அருள் புரிவர்.

(16) செல்வமுடையார் இம்மையிற் பலவேறுவகைப்பட்ட சுகங்களை யனுபவிப்பதுபோல, அறமுடையவர் பரலோகத்தில் பேரின்ப மனுபவிப்பவராவர். இக இன்பத்துக்குச் செல்வம் துணையாதல் போல பர இன்பத்துக்கு அறம் துணையாகும்.

(19-23) நோயுற்றவன் வயித்தியனையடுத்து அவன் தரும் மருந்தை யுண்டு பத்தியங் காத்துத் தேகசுகமுறுவான். பாசபந்தத்தில் கட்டுண்ட ஆன்மாவும் குருவையடுத்து உபதேசம் பெற்றுச் சன்மார்க்கத்தில் நடந்து மெய்ஞ்ஞானத்தையடைவான். பத்தியந் தவறினல், முன்னைப்பிணியன்றி வேறு பல துயருஞ் சேரப்பெறுவான். சன்மார்க்க நெறிதவறி நடந்தால் பாச மொன்றேயன்றிப் பாவமுங்கொண்டு துன்புறுவான்.

(24) பென்ஷன் பெற்று இளைப்பாறுதலாவது தமக்கேற்பட்ட தொழிலை நீதிவழுவாது செய்து அரசனபிமானத்துக் குரியராய் வேலையின்றியே அரசன் பொருள்தரப் பெற்று மகிழ்ந்து வாழ்தலாம். உயிர்களும் தநுகரணபுவன போகங்களைப் பெற்றுப் பன்னாளுமுன்று நல்வினை தீவினை யிரண்டுமொத்த நிலையாகிய இருவினையொப்புவாய்ப்ப, இனிமேற் பிறத்தற் கேதுவில்லையென்ற நிலையை யடைந்து திருவருள் பெற்றிருத்தலாம்.

(26) யாதொரு விதக் குறைவுமின்றி எப்போதும் இன்ப முற்றிருத்தலே சுக ஜீவனமாம். எவ்விதமான கர்ம சேஷமு மில்லாமல் சகலத்தையும் விட்டு இறைவனுடனிரண்டறக் கலத்தலே முத்திப் பேறும்.

இங்கே விரித்துக் காட்டியவற்றைப் போலவே, ஏனையவற்றையும் ஏற்றவாறு விரித்தும், எடுத்துக்காட்டிய 26 விஷயங்களைப்போலவே எடுத்துக்காட்டாத பிறவிஷயங்களை யுய்த்துணர்ந்து ஒப்புமை நாடியும், அறிவிற்கொள்ளவேண்டும். அவ்வாறு கொண்டால், இக வாழ்க்கைப் பேறுகள் யாவும், பரவாழ்க்கைப் பேற்றுக்கு ஒரு பாடசாலையாகவே தோன்றும். பரவாழ்க்கை இன்னதென்று தெரிய வேண்டுமாயின், இகவாழ்க்கையின் தன்மையைக்கொண்டு தெரிந்து கொள்வதே எளிதான வழியாகும்.

காணப்பட்ட தொன்றைக் கொண்டே, காணப்படாததொரு பொருளைக்காணவேண்டுமென்பது தொன்றுதொட்டமரபு. இம் முறைமைதான் தூலாருந்ததி நியாயம் என்பர். (அதாவது அருந்ததி என்னும் மிகச் சிறிய நக்ஷத்திரத்தைக் காட்டுமொருவர் அதற்குப் பக்கத்திலுள்ள பெரிய நக்ஷத்திரமொன்றைக் காட்டி அதைக் கண்டபின், அது அருந்ததியன்று அதன்பக்கத்தே சிறிதாக ஒன்று தோன்றுகிறதே, அது தான் அருந்ததி என்று காட்டுதல்.)

ஆசிரியர் பரிமேலழகியாரும் "காணப்பட்டவுலகத்தாற்காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின்" எனக் கூறியுள்ளார். இதனால் இவர் கருத்தும் இதுவே யாதல் பெறப்படுமென்க.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்"

என்ற பெரியோர் திருவாக்கின்படி, ஞானிகட்கு இவ்வுலகம் எவ்விதமாகத் தோன்றப்பட்டிருக்குமென்பதையும் ஊகித்தறிய வேண்டும். ஞானக்கண்கொண்டு பார்ப்பவர்கட்கு, இவ்வுலகமே பரலோகமாகவும், எல்லாப் பொருளும் கடவுளின் வடிவமாகவும், தோன்றுவதன்றி வேறில்லை யென்க. ஆகவே இகவாழ்க்கையிற் சுகஜீவனத்தை விரும்புபவர்கள் அரசனுடைய சட்டதிட்டங்கட்கு

அடங்கி, இறைப்பொருள் செலுத்திவர வேண்டுமென்பதும், குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவரென்பதும், இதுபோலவே, பரவாழ்க்கையில் முத்திப் பேற்றை விரும்பிய ஆன்மாக்கள், கடவுள் கட்டளையிட்டருளிய வேதாகம புராணேதிகாசங்களிற் கூறப்பட்ட விதி வழுவாது நடந்து, அக்கடவுளிடத்தே அன்பு செலுத்தி வர வேண்டுமென்பதும், பாவம் செய்தவர்கள் நரகதண்டனையை யடைந்து வருந்துவரென்பதும், பெறப்பட்டன. ஆதலால், இகத்திலேயே, பரவாழ்க்கையின் பலன் பெறும் வித்து இடல் வேண்டியதாகையால், அதைக் கருதினராய், நாம் இகத்தில் போடும் வித்து, நல்ல பலன் கொடுக்கும் வித்தைப் பார்த்துப் பொறுக்கிப்போடவேண்டும். அதாவது, எக்காரியம் செய்தாலும், எந்நினைப்பு நினைந்தாலும் அது மறுமையில் நலம் தருமா, தீமை தருமா என்று ஆராய்ந்து அதின் மேல், தீயவை பயக்கும் கருமம், எண்ணம் இவை தவிர்த்து, நன்மை பயக்கும் கருமம் எண்ணம் இவைகளை நடக்கடவோம். "நன்றே செய்மின், நன்றே நினைமின் நமன் இல்லை."

நாம் எதை எதைப்பார்த்தாலும், அதை அதைப்பற்றி அந்தர்முகமான ஆராய்ச்சி செய்து, மனத்தை நல்வழியிற் செலுத்தி வந்தால் மெய்ஞ்ஞானோதயமுண்டாகும். அது உண்டானல், பாவங்கெடும், புண்ணியம் வளரும், பேரின்பம் கைகூடும். சுபம்! சுபம்! சுபம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

## நன்மொழி.

88. நம்முடைய உத்தரவாதம் தவம் அறம் என இருவகைத்தாம். தவம் என்றால் தன் கர்மம் செய்தல், தன் ஆத்மப் பயிற்சி தவம், உள் நோக்குதல், அந்தர்முகப்படுதல், தன்னைத்தானறிதல், ஆத்மஞானம் பெறுதல், அதனல் மெய்யுணர்வு அடைதல், என்பதாம். அறமெனப்படுவது பிறர்நயம் பயக்கும் சத்கர்மத்தைச் செய்தலாம். அவ்விதம் பிறர்க்கு நன்மையுண்டாகும் காரியத்தைச்செய்துவரவே, கடைமுறையில், தன்னுடல், பொருள், ஆவி மூன்றையும் பிறர்க்குத் தியாகம் செய்ய நேரிடும். இவ்வகையாலும்—நான் எனது என்ற எண்ணம் முற்றும் துறந்தவனாய், "எல்லாவுலகத்தையும் ஈசன் எனக்கருதி, நேசித்து," மெய்யுணர்வு பெறுவான்.

# பிரணவ உபாசனை.

---

(முன் 365-ம் பக்கத் தொடர்ச்சி).

## லயசிந்தனை.

8. இந்த லயசிந்தனையைச் சொல்லுகிறேன்:— விசுவரூப அகாரம் தைஜஸரூப உகாரத்துக்கு வேறாகாமல் உகாரரூபமாகவேயிருக்கிறது. இப்படி சிந்தனை செய்தல் இவ்விடத்தில் லயமென்று சொல்லப்படுகிறது. இப்படியே மற்ற மாத்திரைகளிலும் அறிய வேண்டியது. எந்த உகாரத்தில் அகாரம் லயமாகிறதோ அந்தத் தைஜஸரூப உகாரத்தைப் பிராஞ்ஞரூப மகாரத்தில் லயஞ்செய்ய வேண்டியது. இந்த பிராஞ்ஞரூப மகாரத்தைத் துரியரூபமான ஓங்காரத்தின் பரமார்த்த ரூபமாகிய அமாத்திரையில் லயஞ்செய்யவேண்டும். ஏனெனில் ஸ்தூலத்தின் உற்பத்தியும் லயமும் சூக்ஷ்மத்தில் உண்டாகின்றன. ஆகையால் விசுவரூப அகாரம் தைஜஸரூபஉகாரத்தில் லயமாகக்கூடும், சூக்ஷ்மத்தின் உற்பத்தியும் லயமும் காரணத்திலுண்டாகின்றன. ஆனதால் தைஜஸரூப உகாரம் அதின் காரணமாகிற பிராஞ்ஞரூப மகாரத்தில் லயமாகக்கூடும். இந்த விடத்தில் விசுவாதிகளால் சமஷ்டியாகிற விராட்டாதிகளையும் விசுவாதிகளின் திரிபுடிகளையும் விராட்டாதிகளின் திரிபுடிகளையும் அறியவேண்டியது. எந்தப்பிராஞ்ஞரூப மகாரத்தில் உகாரம் லயஞ்செய்யப்பட்டதோ அந்த மகாரத்தைத் துரியரூப் ஓங்காரத்தின் பரமார்த்தரூப அமாத்திரையில் லயப்படுத்த வேண்டியது. ஏனெனில் ஓங்காரத்தின் பரமார்த்த ஸ்வரூபத்துக்கும் துரியத்துக்கும் பேதமில்லை. இந்தத்துரியம் பிர்ம்மரூபம். சுத்த பிர்ம்மத்தினிடத்தில் ஈசுவரனும் பிராஞ்ஞனுங் கல்பிக்கப்பட்டிருக்கின்றன். எது எதில் கல்பிக்கப்பட்டிருக்கிறதோ அது அதின் ஸ்வரூபமாக இருக்கிறது. ஆனதால் ஈசுவரசகிதப் பிராஞ்ஞரூப மகாரம் லயமாகக்கூடும். இவ்விதமாக ஓங்காரத்தின் பரமார்த்த ஸ்வரூபமாகிற அமாத்திரையில் எல்லாம் லயப்படுத்தப்படுகின்றனவோ அதுவே நான் என்று ஏகாக்கிர சித்தத்துடன் சிந்தனைசெய். ஸ்தாவர ஜங்கம ரூபமாயும், அசங்கமாயும், அத்துவயமாயும், அசம்ஸாரியாயும், நித்தியமுக்தமாயும், நிர்ப்பயமாயுமிருக்கிற பிர்ம்மரூபமாகிற ஓங்

காரத்தின் பரமார்த்தஸ்வரூபமே நான் என்று சிந்தனை செய்கிறதினால் ஞானமுண்டாகிறது, இந்த ஓங்காரத்தின் நிர்க்குண உபாஸனை ஞானமூலமாக முக்திரூப பலத்தைக் கொடுக்கிறது. இது எல்லாவற்றிலும் உத்தமமானது.

## ஓங்காரச்சிந்தனைக் கதிகாரி.

9. முன்சொன்னபிரகாரம் எவன் ஓங்கார ஸ்வரூபத்தையறிகிறானோ அவன் முனி. அதையறியாதவன் முனியல்லன். ஏனெனில் முனியென்றால் மனனஞ்செய்கிறவன். இந்த ஓங்காரத்தின் சிந்தனை மனனரூபமாயிருக்கிறது. ஓங்காரத்தின் சிந்தனரூப மனனமில்லாதவன் முனியல்லன். மாண்டூக்கிய உபநிஷத்தையநுசரித்துச் சுருக்கமாக ஓங்காரசிந்தனை சொல்லப்பட்டது. நிருசிம்ஹதாபினி முதலிய உபநிஷத்துகளிலும் இது விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓங்காரசிந்தனை பரமஹம்ஸனுடைய கோப்பியதனம். பகிர்முக புருஷனுக்கு இதில் அதிகாரமில்லை. அத்தியந்தம் அந்தர்முகனாயிருக்கிறவனே அதிகாரி. கிருகஸ்தனுக்கு இதில் அதிகாரமில்லை. ஸ்திரீதன புத்திரசம்பந்தமில்லாத பரமஹம்ஸனே அதிகாரி.

## ஓங்காரத்தியான பலன்.

10 முன்சொன்னபடி ஓங்காரத்தைப் பிர்ம்மரூபமாகத்தியானஞ் செய்கிறதினால் ஞானமூலமாக மோக்ஷஞ் சித்திக்கிறது. ஆனால் எவனுக்கு இந்தலோக போகத்திலாவது, பிர்ம்மலோக போகத்திலாவது இச்சையிருக்கிறதோ, ஆனால் எவன் தீவிரமான வைராக்கியமில்லாமல் பலவந்தமாக இச்சையைத் தகைந்து தன்புத்திராதிகளைத் தியாகஞ்செய்து பரமஹம்ஸ குரு உபதேசத்தால் ஓங்காரரூபப் பிர்ம்மத்தைத் தியானஞ் செய்கிறானோ, அவனுக்குப் போக இச்சை ஞானத்திற் பிரதிபந்தமாயிருக்கிறது. ஆகையால் அவனுக்கு ஞானமுண்டாகிறதில்லை. ஆனால் தியானஞ்செய்கிறதினால் இந்தச் சரீரம் அழிந்தபின் வேறு சரீரங்கிடைக்கிறது. இந்தலோக போகங்களின் இச்சையைத் தகைந்து தியானஞ்செய்ததினால், இந்த லோகத்தில் வெகு செல்வத்துடன் கூடிய பரிசுத்தமான சற்குலத்தில் பிறக்கிறான். அப்போது முன் ஜன்மத்தின் இச்சைகளெல்லாம் நிறைவேறி முன் ஜன்மத்தின் தியான சம்ஸ்காரத்தால் மறுபடியும் விசாரத்தி

லாவது தியானத்திலாவது பிரவிர்த்தியுண்டாகிறது. இதனால், ஞானமுண்டாகி மோக்ஷங்கிடைக்கிறது. பிர்ம்மலோகத்தின்போகங்களில் இச்சையைத் தவிர்ந்து, ஓங்காரரூபப் பிர்ம்மத்தின் தியானத்திற் பிரவிர்த்திக்கிறவன் சரீரத்தைவிட்டுப் பிர்ம்மலோகத்துக்குப் போகிறான். அவ்விடத்தில் மனுஷர்களுக்கும் பிதிர்களுக்கும் தேவதைகளுக்குங் கிடைக்காத சுதந்திரத்தின் ஆனந்தத்தையும் ஹிரண்ய கர்ப்பனுடைய சத்திய சங்கல்பாதி சகல ஐசுவரியங்களையுமடைகிறான்.

11. பிர்ம்மலோகம்போகும் மார்க்கம் அடியில்வருமாறு பிர்ம்மோபாஸனையில் தத்பரனாயிருக்கிற புருஷன் சாகுங்காலத்தில் இந்திரியங்களும் அந்தக்கரணமும் மூர்ச்சையடைந்து ஒன்றையுமறியச் சமர்த்தமாகாவிட்டாலும், யமதூதர்கள் அவனுடைய லிங்கசரீரத்தைக்கொண்டுபோக அவனருகில் வருகிறதில்லை; ஆனால் அக்கினியபிமானிதேவதை அவன்மரணசமயத்தில் அவனுடையலிங்கசரீரத்தையெடுத்துக்கொண்டு தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது. அக்கினிலோகத்திலிருந்து தின அபிமானி தேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது. அங்கிருந்து சுக்கிலபக்ஷ அபிமானி தேவதை தன்லோகத்துக்கும், அங்கிருந்து உத்தராயணகால அபிமானிதேவதை தன் லோகத்துக்கும், அங்கிருந்து ஸம்வத்ஸர அபிமானி தேவதை தன் லோகத்துக்கும், அங்கிருந்து தேவலோக அபிமானிதேவதை தன் லோகத்துக்கும், அங்கிருந்து வாயு அபிமானி தேவதை தன் லோகத்துக்கும், அங்கிருந்து சூரியதேவதை தன் லோகத்துக்கும், அங்கிருந்து சந்திரதேவதை தன்லோகத்துக்கும், அங்கிருந்துமின்னல் அபிமானிதேவதை தன்லோகத்துக்கும், இந்த லிங்க சரீரத்தைக் கொண்டுபோகின்றன. இந்த மின்னல் அபிமானிதேவதையின் லோகத்தில் ஹிரண்யகர்ப்பனுடைய உத்தரவின்படி ஹிரண்யகர்ப்ப லோகத்தில் வசிக்கிறவனும், ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமான ரூபத்தையுடையவனுமான ஒரு திவ்ய புருஷன் (ஆத்மாவை புருஷன் என்று சொல்லப்படுகிறது.) இந்த உபாசகனைக் கொண்டுபோக, இவனிடத்தில் வந்துசேருகிறான். இந்த மின்னல் அபிமானிதேவதையின் லோகத்திலிருந்து வரு

ணலோகத்துக்கு, அவன் அந்த உபாஸகனைக் கொண்டுபோகிறுன். பின்பு வருணலோகத்திலிருந்து இந்திரலோகம் வரையில் வருண தேவதையுடனும், ஹிரண்யகர்ப்ப லோக வாசியுடனும் உபாசகன் போகிறுன். இந்திரலோகமுதல் பிரஜாபதி லோகம்வரையில் இந்திரனுடனும், ஹிரண்யகர்ப்பவாசியுடனும் போகிறுன், அங்கிருந்து பிரஜாபதி பிர்ம்மலோகம் வரையில் அவ்விருவர்களுடன் போகச் சமர்த்தனுகாதபடியால் உபாஸகன்மட்டும் ஹிரண்யகர்ப்பவாசியுடன் பிர்ம்மலோகத்துக்குப் போகிறுன். பிர்ம்மலோகத்தின் அதிபதி ஹிரண்யகர்ப்பன்.

12. ஸூக்ஷ்ம சமஷ்டியின் அபிமானி சேதனத்துக்கு ஹிரண்யகர்ப்பமென்றும்காரியப்பிர்ம்மமென்றும்பெயர். காரியப்பிர்ம்மத்தின் இருப்பிடத்துக்கும் பிர்ம்மலோகமென்று பெயர். மேற்சொன்னபடி ஓங்காரத்தைச் சுத்த பிர்ம்ம ரூபமாகப் பாவித்து உபாசனை செய்கிறவனுக்குச் சுத்தப் பிர்ம்மங் கிடைக்கவேண்டிய தவசியமானுலும், சுத்தப் பிர்ம்மம் ஞானத்தினுலேயே அடையப்படும். இச்சை ரூபப் பிரதிபந்தத்தால் ஞானமுண்டாகாதவனுக்குக் காரிய பிர்ம்மத்தின் சாயுஜ்யரூப மோக்ஷங்கிடைக்கிறது. பிர்ம்ம லோகத்தை யடைந்த உபாசகனுக்கு ஹிரண்யகர்ப்பனுடைய விபூதிகளுக்குச் சமானமான விபூதிகள் கிடைக்கின்றன. அவன் சத்திய சங்கல்பனுகிறுன். இச்சிக்கிற சரீரம் உண்டாகிறது. இச்சிக்கும் போகங்களெல்லாம் சங்கல்பத்தினுலேயே கிடைக்கின்றன. ஒரு சமயத்தில் ஆயிரம் சரீரங்களால் அவ்வவற்றின் போகங்களைத் தனித்தனியே புஜிக்கவேண்டுமென்று இச்சையுண்டானுலும், ஒவ்வொரு போகத்துக்கும் வேண்டிய சாமக்கிரியைகளு முண்டாகின்றன. அதிகமாய்ச் சொல்வானேன்? எந்தச் சங்கல்பஞ்செய்தாலும் சித்தியாகிறது. ஆனுல் ஜகத்தின் சிருஷ்டிஸ்திதிசம்ஹாரம் மூன்றுந் தவிர, ஈசுவரனுடைய மற்ற விபூதிகளெல்லாங் கிடைக்கின்றன. இதற்குத் தான் சாயுஜ்யமோக்ஷமென்று பெயர். இப்படி ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமாகிறவன் வெகுகாலஞ் சத்திய சங்கல்பனுகித், திவ்வியமான பதார்த்தங்களைப் புஜித்துப், பிரளயகாலத்தில் ஹிரண்யகர்ப்ப லோகத்துக்கு நாசம் வரும்போது, ஞான மடைந்து விதேக மோக்ஷத்தை யடைகிறுன்.

13. ஓங்கார ரூபப் பிர்ம்மத்தை யுபாசிக்கிறவனுக்குப் பிர்ம்ம லோகப் பிராப்தி மூலமாக மோக்ஷங்கிடைப்பதுபோல் வேறு உபநிஷத்துகளிற் சொல்லிய பிர்ம்ம உபாசனையினாலும், இதே பலன் உண்டாகிறது. ஆனால் அகங்கிரக உபாஸனையன்றியில் வேறு உபாஸனையால் பிர்ம்மலோக மடையப்படமாட்டா தென்று சூத்திரகாரரும் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகளும் பிர்ம்மசூத்திரத்தின் நாலாவது அத்தியாயத்திற் சொல்லியிருக்கிறார்கள். நர்மதையின் பாணங்களைச் சிவரூபமாகவும் சாளிக்கிராமங்களை விஷ்ணுரூபமாகவும், தியானஞ்செய்தல் பிரதிகத்தியானமே தவிர அகங்கிரகத்தியானமன்று. அப்படியே மனத்தைப் பிர்ம்ம ரூபமாகவும், சூரியனைப் பிர்ம்ம ரூபமாகவும், தியானஞ் செய்தல் பிரதிகத்தியானமே தவிர அகங்கிரஹத்தியானமன்று. இவைகளாற் பிர்ம்ம லோகம் அடையப்படமாட்டாது. சகுணம் அல்லது நிர்க்குணமாயிருக்கிற பிர்ம்மத்தைத் தனக்கு அபேதமாகச் சிந்தனை செய்தல் அகங்கிரகத்தியான மென்னப்படும். இதனால் தான் பிர்ம்ம லோகங் கிடைக்கும். முன் சொன்னமார்க்கம் உத்தராயண மார்க்கம் அல்லது தேவமார்க்கமென்னப்படும். இந்தத் தேவமார்க்கத்தால் பிர்ம்மலோகத்துக்குப்போன உபாஸகனுக்கு மறுபடியும் சமுசார முண்டாகிறதில்லை. ஆனால், அவனுக்கு ஞான முண்டாகி அவன் விதேக முக்தியை யடைகிறான். அவ்விடத்தில் ஞான சாதனங்களான குருஉபதேசாதிகள் வேண்டியதில்லை. ஆனால் பிர்ம்மலோகத்தில் குருஉபதேசாதிகள் அன்றியிலேயே ஞானமுண்டாகிறது. ஏனெனில் பிர்ம்மலோகத்தில் தமோகுண ரஜோகுணங்களின் லேசமுமில்லை. அந்த லோகம் கேவலம் சத்துவகுணப் பிரதானமானது. தமோகுண மில்லாததினால் ஜடத்துவம் அலசியம் முதலியவைகள் இல்லை, ரஜோகுண மில்லாததினால் காமக்குரோதாதி ரூப ரஜோகுணத்தின் காரியமான விக்ஷேபமில்லை. கேவலம் சத்துவகுண மிருப்பதால் அதின் காரியமான ஞான ரூபப் பிரகாசம் அந்த லோகத்தில் முக்கியமாயிருக்கிறது. ஓங்காரத்தைப் பிர்ம்ம ரூபமாக முதலில் உபாசிக்கிறவன் ஓங்காரத்தின் மாத்திரைகளின் அர்த்தத்தை அடியில் சொல்லுமாறு சிந்தனை செய்யவேண்டியது. ஸ்தூல உபாதி சகிதமான விராட்டு விசுவன் இவைகளின் சேதனம் அகாரத்தின் வாச்சியம். சூக்ஷ்ம உபாதி சகித ஹிரண்யகர்ப்பன்

தைஜஸன் இவைகளின் சேதனம் உகாரத்தின் வாச்சியம். காரண உபாதி சகித ஈசுவரன் பிராஞ்ஞன் இவைகளின் சேதனம் மகாரத்தின் வாச்சியம். இப்படி அர்த்தத்தைச் சிந்திக்கிறவனுக்குப் பிர்ம்மலோகத்தில் ஸ்மரணையுண்டாகிறது. சத்துவகுணப் பிரதானத்தால் அடியில்கண்டபடி விவேசனமுண்டாகிறது. ஸ்தூலோபாதியால் சேதனத்தில் விராட்விசுவங்கள் பிரதீதியாகின்றன. ஸ்தூல சமஷ்டி திர்ஷ்டியால் விராட்டென்றும், ஸ்தூலவியஷ்டி திர்ஷ்டியால் விசுவனென்றும் தோன்றுகின்றன. சமஷ்டி வியஷ்டி ஸ்தூல திர்ஷ்டியன்றியில் விராட்விசுவபாவங்கள் தோன்றுகிறதில்லை. ஆனால் சேதனமட்டும் விளங்குகிறது. அப்படியே சூக்ஷ்மஉபாதிசகித ஹிரண்யகர்ப்பதைஜஸசேதனம் உகாரத்தின் வாச்சியமென்றவிடத்தில், சமஷ்டி சூக்ஷ்ம உபாதிதிர்ஷ்டியால் சேதனத்தில் ஹிரண்யகர்ப்பனும் வியஷ்டி சூக்ஷ்ம உபாதிதிர்ஷ்டியால் தைஜஸனும் விளங்குகிறார்கள். சூக்ஷ்ம உபாதிதிர்ஷ்டியன்றியில் ஹிரண்யகர்ப்ப தைஜஸபாவங்கள் தோன்றுகிறதில்லை. அப்படியே மகாரத்தின் வாச்சியம் ஈசுவரன் பிராஞ்ஞனென்றவிடத்தில் சமஷ்டியஞ்ஞான உபாதிதிர்ஷ்டியால், சேதனத்தில் ஈசுவரனும் வியஷ்டியஞ்ஞான உபாதிதிர்ஷ்டியால், பிராஞ்ஞனும் தோன்றுகிறார்கள். அஞ்ஞான உபாதி திர்ஷ்டியன்றியில், ஈசுவரப் பிராஞ்ஞபாவங்கள் தோன்றுகிறதில்லை. எந்த வஸ்து எதினிடத்தில் வேறுதிர்ஷ்டியால் பிரதீதியாகிறதோ, அது அதினிடத்தில் பாரமார்த்திகத்தில் இருக்கிறதில்லை. எதின் எந்தரூபம் வேறு திர்ஷ்டியன்றியில் பிரதீதியாகிறதோ அது அதின் பாரமார்த்திகரூபமாயிருக்கிறது. உதாரணமாக.—ஒரே புருஷனிடத்தில், பிதா திர்ஷ்டியால் புத்திரபாவமும், பாட்டன் திர்ஷ்டியால் பவுத்திரபாவமும், விளங்குகின்றன. இந்த பாவங்கள் பாரமார்த்திகத்தில் இல்லை. புருஷனுடைய பிண்டமே பாரமார்த்திகத்திலிருக்கிறது. இதுபோல் ஸ்தூல சூக்ஷ்மகாரண உபாதிதிர்ஷ்டியால் விராட்விசுவாதிகள் தோன்றுகின்றன. இவைகள் மித்தை; சேதனம் மட்டும் சத்தியம். இந்தச் சேதனம் யாதொருபேதகமுமில்லாதது. ஏனெனில் விராட்டுக்கும் விசுவனுக்குமிருக்கிறபேதம் உபாதியாலுண்டாயிருக்கிறது. இரண்டுக்கும் உபாதி ஸ்தூலமாயிருந்தாலும், விராட்டுக்கு உபாதி சமஷ்டி ஸ்தூலமாயும்,

விசுவனுக்கு உபாதி வியஷ்டிஸ்தூலமாயுமிருப்பதால், சமஷ்டி வியஷ்டி உபாதியால் இவைகளுக்குப் பேதமேதவிர ஸ்வரூபத்திலில்லை.

14. இப்படியே தைஜஸனுக்கும் ஹிரண்யகர்ப்பனுக்கும் சமஷ்டி வியஷ்டி உபாதியால் பேதமே தவிர ஸ்வரூபத்திலில்லை. ஈசுவரனுக்கும் பிராஞ்ஞனுக்கும் சமஷ்டி வியஷ்டி உபாதியால் பேதமே தவிர ஸ்வரூபத்திலில்லை. இவ்விதமாகப் பிராஞ்ஞனுக்கும் ஈசுவரனுக்கும் அபேதம், தைஜஸனுக்கும் ஹிரண்யகர்ப்பனுக்கும் அபேதம், விசுவனுக்கும் விராட்டுக்கும் அபேதமேற்படுகிறது. இவ்விதமாக ஸ்தூலோபாதியுடன் கூடினவனுக்கும், சூக்ஷ்மோபாதியுடன் கூடினவனுக்கும், காரண உபாதியுடன் கூடினவனுக்கும், பேதமில்லை ஏனெனில், ஸ்தூலசூக்ஷ்ம காரணஉபாதிதிருஷ்டியை விட்டுவிட்டால், சேதன ஸ்வரூபத்தில் எவ்விதபேதமும், தோன்றுகிறதில்லை. மேலும் சேதனத்துக்கும் அனாத்மாவுக்குங்கூடப் பேதமில்லை. ஏனெனில் அனாத்ம தேகாதிகள் அவித்தியா காலத்தில் தோன்றுகின்றன. பரமார்த்தத்தில், தோன்றுகிறதில்லை. ஆகையால் அவைகளுக்கும், சேதனத்துக்கும் பேதஞ்சொல்வது சரியன்று. இவ்விதமாகச் சர்வபேதரகிதமாயும், அசங்கமாயும், நிர்விகாரமாயும், நித்தியமுக்தமாயும், நிர்ம்மலரூபமாயும் இருக்கிற ஆத்மா ஓங்காரத்துக்கு லக்ஷியமாயும் ஸ்வயம்பிரகாசரூபமாயும், இந்த உபாஸகனுக்கு விளங்குகிறது. ஆனதால் ஹிரண்யகர்ப்பலோகத்தில் வசிக்கிறவனுக்குச் சமுசாரமுண்டாகிறதில்லை.

மகா வாக்கிய விவேகமன்றியில் ஞானமுண்டாகா விட்டாலும், ஓங்காரத்தின் ஞானமே மகாவாக்கியத்தின் ஞானமாயிருக்கிறது. ஸ்தூலோபாதி சகிதசேதனம் அகாரத்தின் வாச்சியம், ஸ்தூலோபாதி ரகிதசேதனம் அகாரத்தின் லக்ஷியம். சூக்ஷ்மோபாதி சகிதசேதனம் உகாரத்தின் வாச்சியம். சூக்ஷ்மோபாதி ரகித கேவலசேதனம் உகாரத்தின் லக்ஷியம். காரணஉபாதி சகிதசேதனம், மகாரத்தின் வாச்சியம். காரணஉபாதி ரகித கேவலசேதனம் மகாரத்தின் லக்ஷியம். இவ்விதமாகஉபாதிசகித விசுவாதிகள் அகாராதி மாத்திரைகளின் வாச்சியங்களாம். உபாதிரகித சேதனம் எல்லா மாத்திரைகளுக்கும் லக்ஷியமாம். அப்படியே நாமரூபசகல உபாதிரகித சேத

னமும், ஓங்காரத்தின் வாச்சியம். நாமரூபஸகல உபாதிரஹித சேதனமும் ஓங்காரத்தின் லக்ஷியம். இவ்விதமாக ஓங்காரத்துக்கும், மகாவாக்கியத்துக்கும் அர்த்தம் ஒன்றாகவேயிருக்கிறது. ஆனதால் ஓங்கார விவேகத்தால், அத்வைதஞான முண்டாகிறது. இவ்விதமாக பிரணவ உபாசனை சொல்லப்பட்டது.

ஓம் தத் சத்.

நடேசஸ்வாமிகள்.

---

## புத்தகவரவு.

---

**பிரசினோத்தாரத்நமாலை**—இது வினவிடை ரூபமாக, வேதாந்த சாஸ்திர விஷயங்களையும், புராணங்களின்படி, 14 லோகங்களையும், பிரஹ்மாண்ட இயல்பையும், தீபங்களையும் பற்றி, கல்லிடைக்குறிச்சியி லிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ வா. முத்துகிருஷ்ணய்யரவர்களால், எளிய தமிழ்நடையில் எழுதப்பெற்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இக்காலத்தியர்களின் அவசரமாய் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவிற்குத் திருப்தியாக இப்புத்தகம் நடைபெறுகிறது. பொதுவான பலவிஷயங்கள் இதன்கண் வெளிவந்திருக்கின்றன. இதன் விலை அணு 10.

---

## சமாசாரம்.

---

ஜப்பான் தேசத்தில் யோக்கையாமா என்னும் பட்டணத்தில் 16 வயதுள்ள ஒரு சிறுவன் திவ்யதிருஷ்டி பெற்றிருக்கிறான். அவன் படிக்கிற பள்ளிக்கூடத்தில் பரீக்ஷைக் காகிதங்களின் கேள்விகளை தான் நூதனமாய்ப் பெற்றிருக்கும் அந்த சக்தியின் மூலமாய் அறிந்துகொண்டு தன்னுடைய தோழர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள்மூலமாய் இச்சமாசாரம் பள்ளிக்கூட முழுமையும் பரவியது. பரீக்ஷைக்கு வந்தவர்கள் கேள்விகளை முன்னரே தெரிந்துகொண்டிருந்தபடியால் எல்லோரும் ஒருபிழையில்லா

மல் பூர்ணமாய் சரியான விடையெழுதினார்கள். இத்தகைமையுள்ள பையன்கள் அடிக்கடி ஏற்படுவார்களாகில் கேள்விக் கடிதங்கள் மூலமாய்ப் பரீக்ஷைகள் நடத்தப்படாமல் வேறுவிதமாய் நடத்தவேண்டியிருக்கும்.

**மஹிமை தங்கிய ஜார்ஜு** சக்ரவர்த்தியவர்களின் மகுடாபிஷேகம் லண்டன் பட்டணத்தில் வருகிற ஜூன் மாசம் 22-வ. விமரிசையாய் நடத்தப்படும். நம்தேசத்தில் சக்ரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக சம்பந்தமான **தர்பார்** குருக்ஷேத்திரமாகிய டில்லி நகரத்தில் நடைபெறும்.

**ஜனக்கணக்கு:** சென்ற மார்ச்சுமாதத்தில் சர்க்காரால் எடுத்த நம் தேசத்து ஜனக்கணக்கு விவரம்: இப்போது தெரிந்தமட்டில் அது அதிக விவரமில்லாமல் பொதுப்படையாயிருக்கிறது. இந்தியா தேசமுழுமையிலும் 315,00,1099. இதில் சென்ற ஜனக்கணக்கைவிட இந்த ஜனக்கணக்கில் 100-க்கு 7பேர் வீதம் அதிகப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொகையில் பிரிடிஷ் ஆளுகைக்குட்பட்ட நாட்டில் 244,172,371. சுதேசராஜாக்களின் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் மொத்தமாக 70,828,728. சென்னைப்பட்டணம் ராஜதானியில் முந்தின கணக்கைவிட, இந்தக்கணக்கில் 8. 3 அதிகமாகவிருக்கிறது.

**பருத்திக்கோட்டை மனிதன் உணவு:** இதுவரையில் பருத்திக்கோட்டை கால்நடைகளுக்கு (ஆடுமாடுகள்), உணவு என்று அறிந்திருக்கிறோம். மனிதனுக்கு உணவாகவும் ஆகிறதென்று இப்போது அறிகிறோம். அமெரிக்கா தேசத்தில் பருத்திக்கொட்டையை உடைத்து, மேல் தோலைநீக்கி உட்பருப்பைமாவாக அரைத்து ரொட்டி முதலியவைகளாகச் செய்வித்து ருசியான உணவாகக் கொள்ளப்படுகிறது. கோதுமையைவிட அதிகதாதுபுஷ்டியை உண்டுபண்ணக்கூடியதா யிருக்கிறது. தனியாக உண்ணுவதைப்பார்க்கிலும் கோதுமை முதலிய தானியங்களின் மாக்களுடன் சேர்த்து ரொட்டி முதலியவைசெய்து உண்டால் அதிக நலமென்று தெரியவருகிறது. 4பங்கு கோதுமைமாவும் 1 பங்கு பருத்திவிதைமாவும் சேர்த்து பக்குவங்கள் செய்து அவைகளைச் சாப்பிட்டால் ருசியாகவும் தேகத்திற்கு ஆரோக்கியமாகவுமிருக்கிறது. நம் தேசத்தில் ஏராளமாய்ப் பருத்திவிதை இருக்கின்றமையால் மேற்கண்ட விதமான உணவு அனுஷ்டானத்துக்கு வரும்பக்ஷத்தில் அது மிகவும் பயன்படும்.

பத்திராதிபர்.